

கொலம்பியா
வெளியீடு
காயன கந்தர்வ
செம்பை வைத்யநாத
பாகவதர்
வாரிஜதள (ஆபி)
பாவனகுரு (ஹம்ஸநந்தி)
GE.6280
மஹாலிங்கம்
வேணுகானம்
நினு வின......
(2 பாகங்கள்)
ராகம்-நவரஸகன்னடா
GE. 6274
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதறாஸ்.

கல்கி

பொருளடக்கம்

மலர் 5
இதழ் 36

1946 ஏப்ரல் 14

வியய
சித்திரை 2

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

"சதையைத் துண்டுதுண் டாக்கினும் உன்னெண்ணம் சாயுமோ? ஜீவன் ஓயுமோ?
இதயத்துள்ளே இலங்கும் மகாபக்தி ஏகுமோ? நெஞ்சம் வேகுமோ?"

என்று இந்திய தேசபக்தன் அன்னிய அதிகார வர்க்கத்தைப் பார்த்துக் கூறியதாக நமது மகா கவி பாடினார். அவருடைய திருவாக்கைச் சமீப காலத்தில் பாரதத் தாயின் வீரப் புதல்வர்கள் பலர் உண்மைப் படுத்தினார்கள். அவர்களுக் குள்ளே தலை சிறந்த புதல்வர் ஸ்ரீ ஜயப்பிரகாச் நாராயணன் ஆவர். இந்தப் பெருமையை அந்த வீர சிகாமணிக்கு நாமாகக் கொடுத்துவிட வில்லை. எந்த அதிகார வர்க்கத்துடன் அவர் பிடிவாதமாகப் போர் நடத்தினாரோ, எந்த அதிகார வர்க்கத்தினால் பல்வேறு சிறைச்சாலைகளில் அவர் சொல்லொணாத கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டாரோ அந்த அதிகார வர்க்கமே கொடுத்திருக்கிறது.



இந்தியச் சிறைச் சாலைகளிலிருந்து விடுதலை செய்யப்படும் தேசபக்தர்களுக் குள்ளே அவர்தான் இறுதியானவரா யிருக்க வேண்டும் என்ற கொள்கையை அதிகார வர்க்கம் உறுதியாகக் கடைப்பிடித்து காரியத்திலும் நிறைவேற்றி யிருக்கிறது!

ஜயப்பிரகாச் நாராயணன் விடுதலையாகி விட்டார்!

மகாத்மா காந்தியிடம் பரம பக்தியும் மரியாதையும் கொண்டவர் ஸ்ரீ ஜயப்பிரகாச் நாராயணர். எனினும், இந்தியாவின் சுதந்திரத்துக்காகக் கடைப்பிடிக்க வேண்டிய வழியைக் குறித்து அவர் மகாத்மாவுடன் மாறுபட்டார். ஹிம்சையோ, அஹிம்சையோ, பகிரங்கப் புரட்சியோ, இரகசியப் புரட்சியோ எந்த வழியைக் கடைப்பிடித்தாவது இந்தியாவின் சுதந்திரத்தை ஸ்தாபிக்கவேண்டும் என்று ஆசை கொண்டார். இவ்விதம் ஆசைப்படுவதாக வீர நீரமாகப் பேசுவோரில் பலர் கடைசியில் சட்டசபை ஸ்தானத்தையும் மந்திரி பதவியையும் வெகு துணிச்சலோடு கைப்பற்றுவதில் வந்து நிற்பதுண்டு. இதற்கு மாறாக ஸ்ரீ ஜயப்பிரகாச் நாராயணன் தமது உயிரைப் பணயமாக வைத்து ஒரு பெரும் இரகசியப் புரட்சி இயக்கத்தை நாடெங்கும் உருவாக்கினார். 1942-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் மேற்படி இயக்கம் நாடெங்கும் படாசென்று வெடித்த போது, அதன் வேகமானது அதிகார வர்க்கத்தையும், இந்தியப் பொது மக்களையும், காங்கிரஸ் தலைவர்களையுமே ஒரு கலக்குக் கலக்கிவிட்டது.

சமீப காலத்தில் இந்திய இளைஞர்களின் உள்ளத்தைத் தங்கள் வீர தீரச் செயல்களினால் கவர்ந்த இரு பெரும் தலைவர்களிலே நேதாஜி சுபாஷ் முதன்மையானவர். அவருக்கு அடுத்த ஸ்தானம் ஸ்ரீ ஜயப்பிரகாசருக்கு உரியது. ஸ்ரீ ஜயப்பிரகாச் நீடூழி வாழ்ந்து காந்திஜியின் தலைமையில் தேசத்துக்குப் பல அருந் தொண்டுகளை இயற்ற இறைவன் அருள் புரியட்டும்.

கல்கி

மலர் 5 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 36

என்ன சேதி?

திரும்பிப் பார்க்குமா?

ருஷ்யாவுக்கு இப்போது யோககாலம் போலத் தோன்றுகிறது. எதிர்பாராத இடத்திலிருந்தெல்லாம் அதற்கு ஆதரவு கிடைத்து வருகிறது.

ருஷ்யாவைக் கனவிலும் ஆதரிப்பார்கள் என்று நாம் கருதாத இரு இந்தியப் பிரமுகர்கள் சமீப காலத்தில் ருஷ்யாவுடன் நேசப் பான்மையான முறையில் இருக்கப் போவது போலப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் போகும் போக்கைப் பார்த்தால், தீவிர கம்யூனிஸ்டுகளாகக் கூட ஆகிவிடுவார்கள் போலத் தோன்றுகிறது.

அந்த இரண்டு பிரமுகர்களின் பெயர்களையும் சொல்லி விடுகிறோம்.

ஒருவர் தற்போது வைஸிராய் நிர்வாக சபையில் அங்கத்தினராக இருக்கும் டாக்டர் அம்பேத்கர். மற்றொருவர் மாஜி நிர்வாக சபை அங்கத்தினரான சர் பெரோஸ்கான் நூன்.

டாக்டர் அம்பேத்கர் கொஞ்ச நாளைக்கு முன்பு பேசும்போது, தாழ்த்தப்பட்ட மக்களின் உதவிக்காக ருஷ்யாவின் உதவியைப் பெறப் போவதாகச் சொன்னார்.

இப்போது சர் பெரோஸ்கான் நூன் பாகிஸ்தானை அடைவதற்காக ருஷ்யாவின் ஒத்துழைப்பைக் கோரப் போவதாகப் பயமுறுத்தியிருக்கிறார்.

அம்பேத்கரும், பெரோஸ்கான் நூனும் ருஷ்யாவின் உதவியை நாடுவதிலோ, கம்யூனிஸ்டுகளாக ஆவதிலோ நமக்கு ஆட்சேபமோ, பயமோ எதுவும் இல்லை. ஏனெனில் இந்த வகுப்புவாதிகளை ருஷ்யா திரும்பிப் பார்க்காது என்பதில் நமக்குக் கொஞ்சங்கூட சந்தேகம் இல்லை.

திருடன் நெ. 1

"சீனாவிலிருந்து ஜப்பான் திருடியதையெல்லாம் மறுபடியும் சீனாவுக்குத் திருப்பிக் கொடுக்கப் போகிறோம்" என்று பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி பெவின் சொல்லியிருக்கிறார்.

இது சீனாவுக்கு மிகவும் ஆறுதலாயிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், சீனாவிடமிருந்து பிரிட்டன் திருடியதையெல்லாம் யார் வாங்கிக் கொடுப்பது என்பதுதான் தெரியவில்லை. ஜப்பான் ஒரு திருடன் என்றால் பிரிட்டன் நெ. 1 திருடன் அல்லவா? சீனா இன்றிருக்கும் பரிதாபகரமான நிலைமைக்கே பிரிட்டன் அல்லவா காரணம்? சீனாவிலே அபினியைத் திணித்து, பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் திருட்டுத்தனம் செய்து சீன வாழ்க்கையையே சீர் குலைத்த பெருமை பிரிட்டனை அல்லவா சேரும்? அப்படியிருக்கும்போது பிரிட்டன் ஜப்பான்மீது மாத்திரம் திருட்டுக் குற்றம் சுமத்திவிட்டுத் தான் யாதொரு பாவமும் அறியாத நிரபராதிபோல நடிப்பது உலக மகா அக்கிரமங்களில் ஒன்று என்று சொல்வதைத் தவிர வேறு என்ன சொல்லுவது?

ஐந்து கச்சேரிகள்


சென்னையில் தமிழ்ப் பத்திரிகைக்காரர்களுக்காக ஒரு பிரஸ் கிளப்பும் வாசகசாலையும் அமைக்க வேண்டுமென்று தமிழ்நாடு பத்திரிகைக்காரர்கள் சம்மேளனம் சில மாதங்களுக்கு முன்பு ஒரு தீர்மானம் செய்தது ஞாபகம் இருக்கலாம். மேற்படி பிரஸ் கிளப் நிதிக்காகப் பத்திரிகைக்காரர்கள் சம்மேளனம் இம்மாதம் 15-ம் தேதியிலிருந்து 19-ம் தேதி வரை சென்னை ரசிகரஞ்சனி சபாவில் ஐந்து சங்கீதக் கச்சேரிகள் நடத்தப் போகிறது. பிரபல சங்கீத வித்வான்கள் கைங்கரியக் கச்சேரிகள் செய்ய ஒப்புக்கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. இந்தக் கச்சேரிகளில் வசூலாகும் நிதி முழுவதும் மேற்படி பிரஸ் கிளப் — வாசகசாலை ஏற்படுத்துவதற்கு உபயோகிக்கப்படுமாம். பொது ஜனங்கள் இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு மேற்படி சம்மேளனத்தின் நன் முயற்சிக்கு ஊக்கமளிப்பார்களென்று நம்புகிறோம்.


சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: எச். குருமூர்த்தி, c/o கலெக்டர் ஆபீஸ், கதீட்ரல் போஸ்டு, சென்னை.

நிகழ்ச்சிச் சித்திரம்



-உம்மன்


இந்தியாவை விட்டு
வெளியேறாதே !
ஜான்புல்


இந்தியாவின் அறிவாளிக்கும் பிரிட்டிஷ் அறிவாளிகளுக்கும்
புது டில்லியில் யுத்தம் நடக்கிறது.

பூனைகளின் வேலை நிறுத்தம்!

“அன்பார்ந்த உலகப் பூனை மகா ஜனங்களே! எழுங்கள்! விழியுங்கள்! பாட்டாளி மார்ஜாலங்களே! உடனே உங்களுடைய உரிமைகளையும் நன்மைகளையும் பாதுகாத்துக் கொள்ளப் புறப்படுங்கள்!

“உங்களுடைய குறைகள் நிரம்பும்வரையில் எலி பிடிப்பதில்லையென்று உறுதி கொள்ளுங்கள்! உங்களுக்குள்ளே கறுப்புக் காலிகள் அல்லது கருங்காலிகள் அல்லது கோடரிக் காம்புகள் யாராவது இருந்தால், அவர்களைத் தொலைத்துத் தலை முழுகி விடுங்கள்! கடைசியாக, உண்ணா விரதத்தைக் கடைப்பிடிக்கவும் தயாராயிருங்கள்...”

* * *

மேற்கண்டவிதமான அதி தீவிரப் பிரசாரம் மார்ஜால மகா சமூகத்தினிடையே சில காலமாக நடந்து வந்தது. “வேலை நிறுத்தம் செய்வதா, வேண்டாமா?” என்கிற தலைபோகிற பெரும் பிரச்னை கராபுரா பாஷையில் வெகு கடுமையாக விவாதிக்கப்பட்டு வந்தது. “வேலை நிறுத்தம் கூடாது; அதனால் நமக்குத்தான் கெடுதல்!” என்று கூறிய சில மிதவாதப் பூனைகளின் பாடு வெகு ஆபத்தாகி விட்டது. அவை மற்றப் பூனைகளினால் துரத்தப்பட்டு, எலி வளைகளுக்குள்ளே போய் ஒளிந்து கொள்ளும்படி ஆயிற்று!

கடைசியில், “வேலை நிறுத்தம் வேண்டுமா, வேண்டாமா?” என்னும் பிரச்னையின் மீது வோட்டு எடுக்கப்பட்டபோது, பாட்டாளிப் பூனைகளின் மிகப் பெரும்பாலான வோட்டுக்கள் வேலை நிறுத்தம் வேண்டும் என்பதற்குச் சாதகமாகவே விழுந்தன. வேலை நிறுத்தம் வேண்டாம் என்று வோட்டுப் போட்ட ஒரு சில பூனைகள் இரவுக்கிரவே காணாமல் போயின.

எனவே, சரித்திரப் புகழ்பெற்ற பூனைகளின் மகா வேலை நிறுத்தம் ஆரம்பமானபோது, பூனை சமூகத்தில் ‘கருங்காலி’ என்ற நாமதேயமே இல்லாமல் போய்விட்டது. அவ்வளவு ஒற்றுமையாக வெள்ளைப் பூனைகள், கறுப்புப் பூனைகள், மஞ்சள் பூனைகள், ருத்ராட்சப் பூனைகள் உள்படச் சகல பூனைகளும் ஒருமிக்க வேலை நிறுத்தம் செய்து விட்டன.

அவ்வளவுதான்! எலிகளின் மகா சமூகத்தில் பெருங் குழப்பமும் கவலையும் ஏற்பட்டன. “பூனைகள் வேலை நிறுத்தம் செய்து விட்டால், நமக்குக் கதிமோட்சம் ஏது?” என்ற கவலை எலிகளைப் பிடுங்கித் தின்றது.

பூனைகள் எலிக்ளை உட்கொண்டு அவற்றை மோட்சத்துக்கு அனுப்பா விட்டால், நாளுக்கு நாள் எலிகளின் ஜனத்தொகை பெருகிக் கொண்டே போகும்; அளவில்லாமல் பெருகி விடும். அப்படிப் பெருகும் எலிகள் எல்லாவற்றுக்கும் உணவுக்கு எங்கே போவது? அவ்வளவு எலிகளும் வசிக்க வளைகள் எங்கே அமைப்பது? இதெல்லாம் சங்கடமான பிரச்னைகள் அல்லவா? எலி சமூகத்தில் பிரம்மசரியம், ஜிதேந்திரியம் முதலிய ஒழுக்க முறைகள் பழக்கத்தில் இல்லை. அதோடு, பிரஜா உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் கருத்தடை முறைகளையும் எலிகள் அறிய மாட்டா!

ஆகவே, பூனைகளின் வேலை நிறுத்தத்தினால் ஏற்பட்ட நெருக்கடியான நிலைமையைப் பற்றி ஆலோசிப்பதற்காக எலிகளின் மகா சபை கூடிற்று. நாட்டு எலிகள், நகரத்து எலிகள், பாட்டாளி எலிகள், முதலாளி எலிகள் ஆகிய சகல வகுப்புகளையும் சேர்ந்த எலிகளும் எள்ளுப் போட இடமில்லாமல் கூடியிருந்தன.

எலித் தலைவர்கள் மேடைமீது ஏறி வீராவேசமான பிரசங்கங்கள் செய்தார்கள். அந்தப் பிரசங்கங்களைக் கேட்ட எலிகளுக்கு இரத்தம் கொதிக்கவும் மண்டை வெடிக்கவும் ஆரம்பித்தது. சில எலிகளுக்கு மூளை குழம்பி விட்டது. சில எலிகளுக்குத் தலை எது, வால் எது என்று தெரியாமல் போய் விட்டது. சில எலிகள் தலை கீழாகவும், சில எலிகள் வால் மேலாகவும் நின்றன. மொத்த முடிவில், தண்டோபாயத்தைக் கைக் கொண்டு பூனைகளின் வேலை நிறுத்தத்தை முடிவு செய்வது என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப் பட்டது.

அவ்வளவுதான். உலகம் அதுவரையில் கண்டிராத சில அதிசயமான காட்சிகள் காணப்படலாயின. எலிகள் தலைக்கு ஒரு தடியைத் தூக்கிக்கொண்டு கும்பல் கும்பலாகச் சென்று வேலை நிறுத்தம் செய்திருந்த பூனைகளைத் தனித் தனியே சூழ்ந்து கொண்டு

''வேலைக்குப் போகிறீயா? மண்டையில் அடிக்கட்டுமா!'' என்று கேட்கத் தொடங்கின. சில எலிகள் அவ்விதம் காரியத்திலும் செய்து காட்டின.

ஆனால் பூனைகளின் கட்டுப்பாட்டையும் உறுதியையும் கலைக்க முடியவில்லை. ''எங்களைக் கொன்றாலும் சரிதான்; எங்கள் குறைகள் தீர்ந்தாலொழிய வேலைக்குத் திரும்போம்!'' என்று பூனைகள் சொல்லி விட்டன.

எலிகளின் மகாசபை இரண்டாவது தடவை கூடியது. இப்போது, எலிகளின் வீராவேசமும் உற்சாகமும் ரொம்பவும் குறைந்து போயிருந்தன. மிதவாத சமாதானப் பிரிய எலிகளின் பேச்சுக்கு மதிப்பு ஏற்பட்டது. கடைசியில், வேலைநிறுத்தம் செய்திருந்த பூனைகளுடன் சமரசப் பேச்சு தொடங்குவதென்று தீர்மானிக்கப் பட்டது. இதற்காக, மிஸ்டர் சப்ரு எலியும், ஸ்ரீமான் ஜயக்கர் எலியும் சமாதானத் தூதர்களாக அனுப்பி வைக்கப் பட்டனர்.

சமரசப் பேச்சு ஒரு தடவை முறிந்து, பிறகு மறுபடியும் தொடங்கி நடந்து, கடைசியாக வெற்றியடைந்தது. சமரச நிபந்தனைகள் பெரும்பாலும் பூனைகளுக்கு அநுகூலமாகவே இருந்தன. அவை பின்வருமாறு:—

1. பூனைகள் எலிகளைப் பிடிக்க வரும் போது எலிகள் மணிக்கு மூன்றரை மைல் வேகத்துக்கு மேல் ஓடக்கூடாது.

2. எலிகள் வசிக்கும் வளைகள் ஒன்றரை அடி ஆழத்துக்கும் முக்கால் அடி அகலத்துக்கும் அதிகப்படக் கூடாது.

3. வயதான பூனைகள் மோட்சத்தை நாடி ருத்ராட்சம் அணிந்து ஜபம் செய்து கொண்டிருந்தால், அதைப் பார்த்துக் குட்டி எலிகள் ஏளனம் செய்யக்கூடாது.

4. அஸ்தமித்ததும் வளைகளுக்குள் புகுந்து கொள்ளும் கெட்ட வழக்கத்தை எலிகள் விட்டொழிக்க வேண்டும்.

5. இப்போதெல்லாம் பட்டணங்களில் மனிதர்கள் சாப்பிடும் 'ரேஷன்' அரிசியை எலிகள் தின்றுவிட்டு, பிற்பாடு பூனைகளின் வயிற்றுக்குள் போனதும் ரொம்பவும் சங்கடம் கொடுப்பது அதிகமாகி வருகிறது. ஆகையால், எலிகள் ரேஷன் அரிசி சாப்பிடுவதை அறவே நிறுத்தி விடவேண்டும். ஏ, பி, ஸி, டி விடமின்கள் உள்ள உணவுகளையும், பால், தயிர், ஓவல்டின், ஹார்லிக்ஸ், சார்லீஸ் பிஸ்கட் முதலிய சத்துள்ள பதார்த்தங்களையுமே எலிகள் சாப்பிட வேண்டும்.

இரு தரப்பிலும் மேற்படி சமரச நிபந்தனைகள் ஊர்ஜிதம் செய்யப்பட்ட பிறகு பூனைகளின் வேலை நிறுத்தம் ஒருவாறு முடிவடைந்தது.

* • •

அழகு தான்! பூனைகளாவது, வேலை நிறுத்தமாவது, எலிகள் தடியைத் தூக்கிக் கொண்டுபோய்ப் பூனைகளை அடிப்பதாவது,— எல்லாம் வெறும் வேடிக்கைப் பேச்சு என்பதாக நேயர்களில் சிலர் சந்தேகிக்கக் கூடும். ஆனால் அவர்கள் ஏன் அப்படிச் சந்தேகிக்க வேண்டும் என்று நாம் கேட்கிறோம். பூனைகளின் வேலை நிறுத்தத்தைக் காட்டிலும் அதிசயமான சம்பவங்களும், வேடிக்கையான காரியங்களும் நம் கண் முன்னால் இந்தக் காலத்தில் நடக்கவில்லையா என்று யோசித்துப் பார்க்கக் கோருகிறோம்.

உதாரணமாக, போலீஸ்காரர்களின் வேலை நிறுத்தத்தைப் பற்றிச் சிறிது யோசித்துப் பாருங்கள். இந்தமாதிரி அதிசயத்தை இதற்கு முன்னால் எப்போதாவது கேட்டிருக்கிறோமா? இம்மாதிரி நடக்கக்கூடும் என்று எப்போதாவது கனவிலேனும் எண்ணியிருக்கிறோமா?

தொழிலாளிகள், பாட்டாளிகள், ஏழைக் குமாஸ்தாக்கள், சிறைச்சாலைக் கைதிகள் முதலியோர் வேலை நிறுத்தம் செய்தால், அவர்களை அடக்கி ஒடுக்கவும், தடியால் அடித்து அவர்களைத் திரும்ப வேலைக்குப் போகச் சொல்லவும், வேலை நிறுத்தம் செய்தவர்கள் கல்லை விட்டெறிந்தால் அவர்கள் மேல் குண்டை விட்டெறியவும் போலீஸ்காரர்கள் இத்தனை நாளும் உபயோகப் பட்டு வந்தார்கள். அப்படிப் பட்ட போலீஸ்காரர்களே வேலை நிறுத்தம் செய்வார்களானால், அதை எப்படிச் சமாளிப்பது? யார் அவர்களைத் திரும்ப வேலைக்குப் போகச் செய்வது? அதிலும், போலீஸ்காரர்கள் உண்ணாவிரதம் வேறு ஆரம்பித்து விட்டார்களானால், போகும் வழிதான் என்ன?

சென்ற மாதத்தில் இந்திய சாம்ராஜ்யத்தின் தலைநகரான டில்லியில் போலீஸ் ஜவான்கள் வேலை நிறுத்தம் செய்து உண்ணாவிரதத்தைக் கைக்கொண்டதாகக் கேள்விப் பட்டோம்!

புது டில்லி காட்டிய வழியைப் பின்பற்றி மற்றும் பல இடங்களிலும் போலீஸ்காரர்களின் மின்னல் வேலை நிறுத்தம் நடந்து முடிந்திருக்கிறது.

நிதானத்துக்குப் பேர் போன சென்னையிலேகூட போலீஸார் வேலையை ஒழுங்காகப் பார்த்துக் கொண்டு "சம்பளம் மட்டும் வாங்கமாட்டோம்" என்று சொல்லியிருக்கிறார்கள்.

சென்னை சர்க்காரோ அதிசயமான சுறுசுறுப்புக் காட்டிப் போலீஸாரின் சம்பள விகிதங்களைச் சட்டுப் புட்டென்று உயர்த்தியிருக்கிறார்கள்.

இவ்வளவோடு போகுமா? மேற்படி வேலை நிறுத்த வியாதி போலீஸாரிடையே மேலும் பரவுமா?

போலீஸாரின் வேலை நிறுத்தம் என்பது மற்ற சாதாரண வேலை நிறுத்தங்களைப் போலன்று. ரொம்பவும் கவலைப்பட வேண்டிய காரியம்.

அதைப்பற்றி முதன்மையாகக் கவலை கொள்ள வேண்டியவர்கள் திருடர் மகா சமூகத்தினர் ஆவர்.

முக்கியமாக, இரவில் கன்னம் வைக்கும் திருடர்களுக்குப் போலீஸ்காரர்களின் வேலை நிறுத்தத்தினால் ரொம்பக் கஷ்டம் உண்டாகும்.

ஏனென்று கேட்டால், இப்போதெல்லாம் ஜனங்கள் "போலீஸ் இருக்கிறது!" என்ற தைரியத்தினால் அஜாக்கிரதையாயிருக்கிறார்கள். வீட்டுப் பாதுகாப்பு, சொத்துப் பாதுகாப்பு விஷயத்தில் அலட்சியமாயிருக்கிறார்கள்.

"போலீஸ் இல்லை" என்று ஏற்பட்டுவிட்டால் அவரவர்களும் ஜாக்கிரதையாகி விடுவார்கள்; தற்காப்புக்குத் தயாராயிருப்பார்கள்.

அப்புறம் பட்டப் பகல் கொள்ளைக்காரர்களுக்குத்தான் காலமே யொழிய இரவில் கன்னம் வைக்கும் சாதுத் திருடர்களுக்கு ஆபத்தாய்ப் போய்விடும்!

எனவே, போலீஸ் வேலை நிறுத்தம் செய்தால் அதை முடிவு செய்வதில் கன்னம் வைக்கும் திருடர்களுக்குச் சிரத்தை ஏற்படுவது இயற்கை.

அடுத்தபடியாக, அது விஷயத்தில் சிரத்தை கொள்ள வேண்டியவர்கள் பொதுஜனங்கள்.

அன்னிய ஆட்சியின் கீழ் அடிமைகளாக இருக்கும் நிலைமையில் எல்லாம் தலைகீழாக நமக்குத் தோன்றுகிறது. சுதந்திரக் கிளர்ச்சியை ஒடுக்குவதற்குப் போலீஸ்காரர்கள் உபயோகிக்கப்பட்டு வந்த காரணத்தினால், பொதுஜனங்கள் போலீஸாரைச் சத்துருக்களாகக் கருதுவது வழக்கமாகி விட்டது. ஆனால் சுதந்திர இந்தியாவிலோ, பொது ஜனங்களுக்கு மிகவும் முக்கியமான சேவை செய்யும் உற்ற நண்பர்களாகப் போலீஸார் கருதப்படுவார்கள்.

அப்படியிருக்க, இந்தியாவுக்குச் சுதந்திரம் நெருங்கி வந்துகொண்டிருப்பதாகத் தோன்றும் இந்த இரண்டுங் கெட்ட நிலைமையில் போலீஸ்காரர்கள் வேலை நிறுத்தம் செய்ய ஆரம்பிக்கிறார்கள்! இது என்ன கூத்து?

போலீஸார் வேலை நிறுத்தம் செய்தால் ரொம்ப நல்லதாய்ப் போயிற்று என்று பொதுஜனங்கள் சந்தோஷப்பட்டுச் சும்மா இருந்து விடுவதா? அல்லது வருங்காலத்தை நினைத்துப் பார்த்து, வேலை நிறுத்தம் செய்யும் போலீஸாரிடம் அனுதாபம் காட்டி அவர்களுடைய குறைகள் தீர்க்கப்படுவதற்கு ஒத்தாசை செய்வதா? பெரிய தர்மசங்கடமாக வல்லவா இருக்கிறது?

* * *

வேலை நிறுத்த வேடிக்கைகளில் போலீஸ் வேலை நிறுத்தத்தையும் மிஞ்சியது ஒன்று உண்டு என்றால், அது பள்ளிக்கூட உபாத்தியாயர்களின் வேலை நிறுத்தந்தான்!

இதுகாறும் நாம் சாதாரணமாய் மாணாக்கர்களின் வேலை நிறுத்தம் பற்றித்தான் கேள்விப் பட்டு வந்திருக்கிறோம். திடீரென்று தேசபக்தி மிதமிஞ்சிப் போய்ச் சுதந்திர ஆவேசம் வந்து மாணாக்கர்கள் வகுப்பை விட்டுக் கிளம்பி ஊர் வலம் போகத் தயார் ஆவார்கள். தேச பக்தியும் சுதந்திர தாகமும் இல்லாத உபாத்தியாயர்கள் குறுக்கே நின்று மறித்து நல்ல வார்த்தை சொல்லி மாணாக்கர்களை வகுப்புக்குத் திரும்பச் சொல்வார்கள்.

இதையெல்லாம் நாம் பார்த்திருக்கிறோம்; கேட்டிருக்கிறோம்.

ஆனால், உபாத்தியாயர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள் என்றும், தெருவீதிகளில் ஊர்வலம் போனார்கள் என்றும் சென்ற மாதத்திலே தான் முதன் முதலாகக் கேள்விப் பட்டோம்.

பம்பாயில் அந்த விநோதம் நடந்தது. சென்னை மாகாணத்திலும் சில இடங்களில் அந்த வேடிக்கை நடக்கும் என்று பேச்சு உலாவுகிறது.

உபாத்தியாயர்களும் ஆசிரியர்களும் தங்களுடைய குறைகளைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு வேலை நிறுத்தம் செய்வது பற்றித் தீவிரமாக யோசித்து வருவதாகத் தெரிகிறது.

போலீஸ்காரர்களையும் பள்ளிக்கூட உபாத்தியாயர்களையுமே வேலை நிறுத்த வேகம் பிடித்திருக்கிறது என்றால், மற்றவர்களைப் பிடிப்பதற்குக் கேட்பானேன்?

தபாலாபீஸ் சிப்பந்திகள் வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுக்கிறார்கள். டிராம்வே தொழிலாளிகள் நோட்டீஸ் கொடுத்துப் பூர்வாங்க வெற்றி பெற்று விட்டார்கள். கிராம உத்தியோகஸ்தர்கள் வேலை நிறுத்தம் செய்து விட்டு உண்ணாவிரதமும் இருக்கப் போகிறார்கள்!

மற்றப்படி ஆலைத் தொழிலாளிகள், சாலைத் தொழிலாளிகள், ஓட்டல் தொழிலாளிகள், அச்சுத் தொழிலாளிகள் முதலியோர் வேலை நிறுத்தம் தொடங்குவதற்குக் காரணங்கள் கண்டுபிடித்து வருகிறார்கள்.

ரயில்வேத் தொழிலாளிகள் தங்களுடைய அபாரமான சக்தியைச் சென்ற சில வருஷங்களில் ரொம்பவும் உணர்ந்திருக்கிறார்கள்.

நாலு இடத்தில் தண்டவாளத்தைப் பிடுங்கி ரயிலை நிறுத்துவதால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே ஸ்தம்பிக்கச் செய்ய முடியுமென்றால், ரயில்வேத் தொழிலாளிகள் தங்களுடைய சொந்தக் குறைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாதா?

சென்ற ஒரு வருஷத்தில் பொன்மலையில் சில சின்னப் பிரச்னைகளில் மின்னல் வேலை நிறுத்தங்கள் நடத்தி வெற்றியடைந்திருக்கிறார்கள்.

ரயில்வேத் தொழிலாளர்களுடைய குறைகள் பூரணமாகத் தீர்ந்து விடவில்லை. வேலை நிறுத்த வேகமும் குறைந்து விட்டதாகத் தெரியவில்லை.

* * *

இப்படித் தேசமெங்கும் வேலை நிறுத்த வேகமானது இந்தச் சந்தர்ப்பத்தில் பரவி வருவானேன் என்ற கேள்வி இயற்கையாக எழுகின்றது.

இந்தியா கூடிய சீக்கிரத்தில் சுதந்திரம் அடையப் போகிறது என்ற நம்பிக்கை தேசத்தில் எல்லா வகுப்பாரிடையேயும் பரவிப் பதிந்திருப்பதுதான் காரணம். அந்த நம்பிக்கை காரணமாக, ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய நிலைமையை இந்தச் சந்தர்ப்பத்தில் உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்கள்; அதற்கு எல்லாரும் அவசரப்படுகிறார்கள். ஒரு வேளை இப்போது சும்மா இருந்தால் 'தூங்கின கன்று கடாக்கன்று' என்னும் பழமொழிக்கு உதாரணமாகி விடுவோமோ என்று அஞ்சுகிறார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எல்லாரும் தங்கள் நிலைமையை உயர்த்திக் கொள்ள விரும்புவது நியாயமானதுதான். அதற்காக அவசரப்படுவதும் இயற்கைதான். ஆனால் ரொம்ப அவசரப்படுவதினாலும் காரியம் கெட்டுப் போய் விடலாமென்பதைத் தொழிலாளி பாட்டாளி வர்க்கத்தார், எழுத்தாளி கணக்காளி வர்க்கத்தார் எல்லாருக்கும் நினைவூட்ட விரும்புகிறோம்.

சுதந்திர இந்தியாவில் அவர்களுடைய நன்மைகள் புறக்கணிக்கப்படுமோ என்ற பயம் வேண்டியதில்லை. காங்கிரஸ் மகா சபையும் அதன் தலைவர்களும் இந்தியாவின் சுதந்திரத்துக்காகப் போராடுவதெல்லாம் எதற்காக? இந்தியாவின் ஏழைத் தொழிலாளி மக்கள் — பாட்டாளி மக்களின் நன்மையை முன்னிட்டே யல்லவா?

அரசாங்க உத்தியோகங்களில் கீழ்ப்படியிலுள்ள போலீஸ் சேவகர்கள், வில்லைச் சேவகர்கள், குமாஸ்தாக்கள், கிராமாதிகாரிகள் முதலியவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதும், சொற்ப சம்பளத்தில் அரைப் பட்டினியோடு உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயர்களின் நிலைமையை உயர்த்துவதும் காங்கிரஸ் மந்திரிகள் முதன்மையாகச் செய்ய வேண்டிய காரியங்கள் அல்லவா?

ஆனால், இவையெல்லாம் காங்கிரஸ் மந்திரிகள் செய்வதற்குச் சிறிது அவகாசம் கொடுக்க வேண்டும்.

வேலை நிறுத்தம் என்கிற தீவிரமான கடைசி ஆயுதத்தைத் தொழிலாளிகள் ஆரம்பத்திலேயே கையாளுவது முறையன்று. அதனால் அவர்களுக்கும் நன்மையில்லை, தேசத்துக்கும் நன்மையில்லை. அவசரப்பட்டு வேலை நிறுத்தம் செய்வதினால் காங்கிரஸ் மந்திரிகளுக்குச் சங்கடம் கொடுப்பதுடன் தங்களுக்கும் கஷ்டத்தைத் தேடிக் கொள்வதாகும்.

இவையெல்லாம் தொழிலாளிகளும் அவர்களை நடத்தும் தலைவர்களும் இலாகாக்களில் கீழ்ப்படிகளில் உள்ள சிப்பந்திகளும் நன்கு கவனித்துக் கொஞ்ச நாளைக்குப் பொறுமையைக் கடைப்பிடிக்கக் கோருகிறோம்.

வேலை நிறுத்தம் என்கிற ஆயுதத்தை அவசரப்பட்டுப் பிரயோகித்துத் தங்கள் சக்தியை வீணாக விரயமாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.



வான சஞ்சாரம்

இசைத்தேனீ

கலப்பில்லாத சுத்தக் கர்நாடக சங்கீத மாயினும், உண்மைத் திறம் படைத்தவர் பாடினால் அதில் ஒரு தனி அழகு இருக்கும் என்பது, 8௳ திருச்சியில் பாலக்காடு ராம பாகவதரின் முழுநேரக் கச்சேரியிலிருந்து தென்பட்டிருக்கும். அவரது சாரீரம் சிறிது கட்டையே. ஆனால் ஞானப் பெருக்கும், சாதகச் சிறப்பும் கொண்ட மதிப்பு வாய்ந்த வித்வான். அன்று அவரது தோடியும், ஆனந்தபைரவியும், நேர் முறையும், அழகு சஞ்சாரங்களும் கொண்டு முதல் ஸ்தானத்துக்குப் போட்டி விட்டன. தேவ மனோஹரி, கல்யாணி, ஸஹானா ராகங்களை அடுத்தபடியாகச் சொல்லலாம். 'குன்றம் குடி கொண்ட வேலவா' என்ற உருப்படியும் அதன் நிரவல் ஸ்வரங்களும் வெகு நாமா யிருந்தன.

7௳ சென்னையில் டி. கே. ராதாகிருஷ்ணன், திருச்சியின் பல்லடம் வி. என். ராஜன் இவர்களின் வேணுகானங்கள் முதல்தரமா யிருந்தன. தற்காலத்தில் அவ்வாத்தியத்தைக் கையாளும் இளம் வித்வான்களில் இவ்விருவரும் கைதேர்ந்தவர்கள். முன்னவர் சுருதி சுத்தமும், நாதப் பொழிவும், கற்பனைச் சிறப்பும் கொண்டு வாசித்த கரஹரப்ரியா, ஹம்ஸநந்தி, கேதாரகௌளை ராகங்கள் வசீகரமா யிருந்தன. பின்னவரது காம்போதி, ஜகன் மோஹினி, ஆனந்தபைரவி, பல்லவி ராகமாம் சங்கராபரணம் இவை சிறப்பா யிருந்தன.

அன்று சென்னையில் எஸ். ராஜம், கம்பீ போல் இழையும் சாரீரத்தில், தனிமையான அழகு சாதகத்துடன் நாட்டக்குரஞ்சி ராகத்தை மனோஹரமாய் வழங்கினார். அத்துடன் 62-வது கர்த்தா அபூர்வ ராகமாம் ரிஷபப்ரியாவையும், அதில் 'மகாத்முலே' என்ற வாகதேவாசாரின் கிருதியையும், வடுப்படாமல் நற் சொரூபங்களாய்ச் சித்திரித்தது மெச்சத்தக்கது.

6௳ சென்னையில் எதிர்பாராது கிடைத்த சந்தர்ப்பத்தை நன்கு உபயோகித்து, நற் பெயரெடுத்த சேதுராமய்யாவின் திறமையே திறமை. அன்று கே. எஸ். நாராயணய்யங்காரின் கோட்டு வாத்தியத்துக்குப் பதிலாக அவர் ஒன்றரை மணி நேரம் வயலின் கச்சேரியில் சக்கைப் போடு போட்டார். ஒவ்வொரு உருப்படிக்கு முன்னும் அதன் ராகத்தை விளக்கும் முறையில் 8 ராகங்களை வாசியளித்தார். எல்லாம் வனப்பு வடிவங்களா யிழைந்தன. பல்லவி ராகத்திற்கு தைரியமாய், வராளியை எடுத்துக்கொண்டு தெளிவாய் ஆலாபனை செய்து தானத்தை ராகமாலிகையாய் அமைய வைத்து, பல்லவியில் நன் கைச் சரக்கு முழுவதையும் காட்டினார். ஆனந்தபைரவியும், ஆரபியும் மற்றவைகளுக்கு மேலா யிருந்தன.

அதேமாதிரி 3௳ திருச்சியில், நடந்த மைசூர் டி. சௌடையாவின் வயலின் கச்சேரியும் உயர்ந்த ரகமாயிருந்தது. அவரும் எல்லா உருப்படிகளுக்கும் அவைகளின் ராகங்களை வாசித்தார். அவரது வராளிக்கே முதல் ஸ்தானம் கொடுக்க வேண்டும். கதனகுதூகலமும் ஜோரா யிருந்தது. மொத்தத்தில் சென்ற வாரத்தில் கேட்ட ராகங்களைக் கவனிக்கும்போது, அதை வராளி, ஆனந்தபைரவி வாரமென்று சொல்லலாம்.

* * *

2௳ திருச்சியில், பாலக்காடு கே. வி. நாராயணசாமி, சென்னையில், ஆராணி சாரதாம்பாள் இவர்களின் கச்சேரிகள் நாமா யிருந்தன. முன்னவரது பல ராகங்களில், சங்கராபரணம் விசேஷமாயும் சிறப்பாயு மிருந்தது. பின்னவரது மணிரங்கும், பைரவியும் கவனத்தை யிழுத்தன.

4௳ திருச்சியில், ஸ்திரீ சாரீரமோ என்று சந்தேகம் கொடுக்கும்படி மதுரமான குரலில் சிறந்த வழியுடன், ஒருகானம் கேட்டது. பிலஹரி, பைரவி, தன்யாசி ராகங்கள் அழகா யிருந்தன. பாடியவர் கந்தர்வகோட்டை எஸ். கிருஷ்ணமூர்த்தி.

5௳ சென்னையில் வி. பெருந்தேவி, இ. ஆர். தேசிகன் இவர்களின் கானங்கள் குறிப்பிடத்தக்கவை. முதலவரது இனிமையும், கனிப்பும் கொண்ட குரலிலிருந்து வந்த ஸ்ரீரஞ்சனி, கரஹரப்ரியா ராகங்கள் நாமா யிருந்தன. இ. ஆர். தேசிகனுடைய நடுத்தர சாரீரத்தி லிருந்து நாஸூக்காய் இழைந்து வந்த கல்யாணி கவனத்தைக் கவர்ந்தது.

6௳ சென்னையில், கே. வி. கிருஷ்ணன், நய சாரீரத்தில், நல்ல ஞானமும், உதவுபடியும் கொண்டு பல ராகங்களை இனிது வழங்கினார். பிலஹரி வெகு சிறப்பா யிருந்தது.

8௳ சென்னையில் பாடிய டி. கே. ராமசாமிக்கும் நடுத்தர சாரீரம். அவர் வழங்கிய நாட்டை, பூர்விகல்யாணி, மத்யமாவதி ராகங்கள் நல்வடிவங்களா யிருந்தன.

மிருதங்க வித்வான் ஸ்ரீ பழனி சுப்பிரமணியப் பிள்ளை அவர்களுடைய தகப்பனாரும், பிரபல மிருதங்கம் கஞ்சிரா வித்வானுமான பழனி முத்தையா பிள்ளை அவர்கள் சென்ற 23-3-46 அன்று தமது இல்லத்தில் காலமான செய்தி கேட்டு மிகவும் வருந்துகிறோம். ஸ்ரீ முத்தையா பிள்ளை அவர்கள் அந்தக் காலத்தில் கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யர், பூச்சி அய்யங்கார், புஷ்பவனம் போன்ற பிரபல மகா வித்வான்களின் கச்சேரிக்கு மிருதங்கம் வாசித்துக் கீர்த்தி பெற்றவர். இத்தகைய ஒரு பழம் பெரும் மிருதங்க வித்வானுடைய பிரிவானது சங்கீத உலகத்துக்குப் பெரும் நஷ்டமாகும்.

ஸ்ரீ முத்தையா பிள்ளையின் சுற்றத்தாருக்கும் நண்பர்களுக்கும் அவருடைய அருமை மகன் ஸ்ரீ பழனி சுப்பிரமணியப் பிள்ளைக்கும் நமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிவகாமியின் சபதம்

கல்கி

அத்தியாயம் 33

நேசத் துரோகி

நதிக்கரைப் பாறையில் புலிகேசிக்கும் புத்த பிக்ஷுவுக்கும் நடந்த சம்பாஷணை மேலும் மேலும் குரோதம் நிறைந்ததாகிக் கொண்டு வந்தது.

சிவகாமியின் விஷயத்தில் நாகநந்திக்கு ஏற்பட்டிருந்த மதி மயக்கத்தைப் போக்கப் புலிகேசி சக்கரவர்த்தி முயன்றார். ஆனால் இது சம்பந்தமாகச் சக்கரவர்த்தி சொன்னதெல்லாம் நாகநந்தியின் குரோதத்தையே அதிகமாக்கிற்று.

சிவகாமியைப் பற்றிப் புலிகேசி குறைவு படுத்திப் பேசப் பேசப் புத்த பிக்ஷு ஆவேசத்துடன் அவளை உயர்த்திப் பேசலானார்.

சிவகாமி அயல் நாட்டாள், அற்பச் சிற்பியின் மகள், காஞ்சி பல்லவனின் காலில் விழுந்து கிடக்கும் அடிமைப் பெண் என்று கூறிப் புலிகேசி அவளை அவமதித்தார்.

சிவகாமி கலைமகளின் அவதாரம், சௌந்தரிய தெய்வம், மாமல்லனையும் புலிகேசியையும் போன்ற முடி மன்னர்கள் எல்லாம் தன்னுடைய காலில் விழுந்து வணங்குவதற்குரிய கலைப் பேரரசி என்று புத்த பிக்ஷு அவளை மேன்மைப் படுத்தினார்.

சகோதரர்களுக்கிடையில் மேற்படி விவாதம் ரொம்பவும் காரமடைந்து அவர்கள் ஒருவரையொருவர் தாக்கிக் கொல்லுவதற்கு ஆயத்தமாகி விட்ட சமயத்தில் அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்துக்குச் சிறிது தூரத்தில் நடந்த ஒரு கோர சம்பவம் அவர்களுடைய கவனத்தைக் கவர்ந்தது.

கேட்பவர்களின் இருதயம் நின்று போகும்படியான பயங்கரக் குரலில் "ஐயோ! ஐயோ!" என்று அலறிக் கொண்டு ஒரு மனிதன் ஓடி வந்து வாதோரா நதியின் செங்குத்தான கரையின்மீது ஒரு கண நேரம் நின்றான். மறுபடியும் "ஐயோ!" என்று அலறி விட்டு விரைந்தோடிய நதிப் பிரவாகத்தில் குதித்தான். குதித்தவுடனே தண்ணீரில் மூழ்கினான். சில வினாடி நேரத்துக்கெல்லாம் அவன் குதித்த இடத்துக்குச் சற்று தூரம் கிழக்கே அவனுடைய தலை மட்டும் மேலே எழுந்தது. பாறையே பிளந்து போகும்படியான ஒரு பயங்கரக் கூச்சல். மறுபடியும் தண்ணீரில் முழுகியவன் முழுகியவன்தான். அவன் முழுகியதற்கு அடையாளம் கூட அங்கே காணப்படவில்லை.

மலை வீழ் நதியான வாதோரா சலசல சப்தத்துடன் விரைந்து பாய்ந்து கொண்டிருந்தது.

சில வினாடி நேரத்துக்குள் நடந்து முடிந்து விட்ட மேற்படி சம்பவத்தைப் புலிகேசி சக்கரவர்த்தி கண் கொட்டாத பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார். நதிப் பிரவாகத்தில் விழுந்த மனிதன் மேலே எழும்பி அலறி விட்டு மறுபடியும் மூழ்கிய போது புலிகேசியின் இருதயத்தை யாரோ இரும்புக் கிடுக்கியினால் இறுக்கிப் பிடித்தாற்போலிருந்தது.

சற்று நேரம் அந்த மனிதன் முழுகிய இடத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் புலிகேசி திரும்பி நாகநந்தியைப் பார்த்தார். பிக்ஷுவின் முகத்தில் அப்போது தோன்றிய புன்னகை புலிகேசியின் உடம்பைச் சிலிர்க்கச் செய்தது.

"அண்ணா! அந்தச் சைத்திரிகனை நீ என்ன செய்து விட்டாய்?" என்று புலிகேசி கேட்டதும், புத்த பிக்ஷு ஒரு பேய்ச் சிரிப்புச் சிரித்து விட்டுச் சொன்னார்:—

"அவனையா? நானா? வேறொன்றும் செய்யவில்லை! அப்போர்ப்பட்ட அழ

கான அற்புதமான சித்திரத்தை வரைந்தவனுக்கு ஆசி கூறினேன். என்னுடைய ஆசியைப் பெறுவதற்காக அவன் தலையைக் குனிந்தபோது அவனுடைய பின் கழுத்தில் இந்தக் கண்டுவிரல் நகத்தினால் ஒரு கீறல் கீறினேன். இந்த நகத்திலுள்ள விஷம் அவனுடைய உடம்பின் இரத்தத்தில் கலந்ததும் அவனுக்கு எரிச்சல் எடுத்திருக்கும். சற்று நேரத்துக்கெல்லாம் அவன் உடம்பு முழுவதும் அக்கினியினால் தகிக்கப்படுவது போல் இருந்திருக்கும். அவனுடைய மூளையும் கொதிப்பெடுத்திருக்கும். உடம்பையும் மூளையையும் குளிரச் செய்வதற்காகவே அவன் அப்படி விரைந்து ஓடி வந்து நதியில் குதித்தான். அவனுடைய உடம்பும் மூளையும் குளிர்ந்ததோடு உயிரும் குளிர்ந்து போய் விட்டது!......"

"ஐயோ! அண்ணா! நீ எப்போது இத்தகைய கொடூர ராட்சஸன் ஆனாய்? கருணையே வடிவான புத்த பகவானுடைய சங்கத்தில் சேர்ந்து காவி வஸ்திரம் அணிந்து கொண்டு இப்படிப்பட்ட கோர கிருத்யங்களைச் செய்ய எப்படி உன் மனம் துணிகிறது?" என்று புலிகேசி கேட்டார்.

நாகநந்தி புலிகேசியை உற்று நோக்கிச் சிறலுடன் கூறினார்:—"ஓஹோ! நான் கருணையற்ற ராட்சஸன் என்பது இப்போதுதான் தெரிகிறதோ? நல்லது தம்பி, நல்லது! உனக்காகவும் உன் இராஜ்யத்துக்காகவும் இதைவிட ஆயிரம் மடங்கு கோர கிருத்யங்களை நான் செய்யவில்லையா? அப்போதெல்லாம் நீ ஏன் எனக்குத் தர்மோபதேசம் செய்ய முன்வரவில்லை? காஞ்சி நகரத்துக் குடி தண்ணீரில் விஷத்தைக் கலந்து அந்நகர மக்களையெல்லாம் கொன்று விடுவதாக நான் சொன்னபோது நீ சந்தோஷத்துடன் சம்மதித்ததை மறந்து விட்டாயா?..."

"ஆம், ஆம்! அதையெல்லாம் நான் மறக்கவில்லை. ஆனால் அது ஒரு காலம்!" என்று கூறிப் புலிகேசி சக்கரவர்த்தி பெருமூச்சு விட்டார். சற்று நேரம் நதியின் பிரவாகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு நாகநந்தியின் முகத்தை ஏறிட்டு நோக்கினார்.

"அண்ணா! நீ எனக்குச் செய்த உதவிகளையெல்லாம் நான் மறந்து விடவில்லை. இந்த உயிர் உன்னுடையது; இந்த இராஜ்யம் உன்னுடையது. நீ எனக்குச் செய்திருக்கும் உதவிகளுக்கெல்லாம் இத்தனை காலமும் நான் பிரதி யொன்றும் செய்யவில்லை. இப்போது செய்ய உத்தேசித்திருக்கிறேன். வாதாபி சிம்மாசனத்தில் வீற்றிருந்து சாம்ராஜ்யம் ஆளும் சுகத்தை முப்பத்தைந்து வருஷகாலம் நான் அநுபவித்து விட்டேன். எனக்குப் போதும் போதும் என்று ஆகிவிட்டது. சாம்ராஜ்யத்தின் பொறுப்பையும் சிம்மாசனத்தின் சுகத்தையும் இனிமேல் நீ ஏற்றுக் கொள். இத்தனை காலமும் நீ அணிந்திருந்த காவி வஸ்திரத்தை நான் அணிந்து கொண்டு இந்த அஜந்தா சங்கிராமத்திலேயே மீதியுள்ள என் வாழ் நாளைக் கழித்து விடுகிறேன். பிரகிருதிதேவியும் கலைத்தேவியும் பூரண சௌந்தரியத்துடன் கொலு வீற்றிருக்கும் இந்த அஜந்தா மலையில் நீ உன்னுடைய இளம் பிராயத்தைக் கழித்தாய். நான் என்னுடைய முதுமைப் பிராயத்தை இவ்விடத்தில் கழிக்கிறேன். சாம்ராஜ்ய பாரத்தை இனிமேல் நீ ஏற்றுக் கொண்டு நடத்து......"

இவ்விதம் புலிகேசி சக்கரவர்த்தி சொல்லி வந்தபோது, அவருடைய வார்த்தை ஒவ்வொன்றும் உண்மை உள்ளத்திலிருந்து வருவது என்பதைப் புத்த பிக்ஷு தெரிந்து கொண்டார். இத்தனை நேரமும் குரோதம் கொதித்துக்கொண்டிருந்த அவருடைய முகம் இப்போது மகிழ்ச்சியினால் மலர்ந்தது. புலிகேசி பேச்சை இடையில் நிறுத்தி மௌனமாயிருந்த சிறிது நேரத்தில் பிக்ஷுவின் உள்ளம் வருங்காலத்தைப் பற்றிய எத்தனையோ இன்பக் கனவுகளைக் கண்டது. அந்தக் கனவுகளின் அறிகுறி ஒருவாறு அவருடைய முகத்திலே காணப்பட்டது.

"அண்ணா! என்ன சொல்கிறாய்? உனக்குச் சம்மதந்தானே?" என்று புலிகேசி கேட்டபோது, அவருடைய வார்த்தையில் புத்த பிக்ஷுவுக்குப் பூரண நம்பிக்கை ஏற்பட்டிருந்தபோதிலும், இன்னும் நன்றாக உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, "தம்பி!

இப்போது நீ சொன்ன வார்த்தையெல்லாம் உண்மையா? அல்லது காவி வஸ்திரம் தரித்த பிக்ஷு தானே என்று என்னைப் பரிகாசம் செய்கிறாயா?" என்று கேட்டார்.

"அண்ணா! நமது பாட்டனார் சத்யாச்ரய புலிகேசியின் திருநாமத்தின் மீது ஆணை வைத்துச் சொல்கிறேன். நான் கூறியதெல்லாம் உண்மை. இதோ, இந்தக் கணமே அதை மெய்ப்பிக்கச் சித்தமாயிருக்கிறேன். இன்றைக்கே நான் பிக்ஷு விரதம் மேற்கொள்கிறேன். ஆச்சாரிய பிக்ஷுவிடம் சொல்லி உனக்கும் பிக்ஷு விரதத்திலிருந்து விடுதலை வாங்கித் தருகிறேன். ஆனால் இதற்கெல்லாம் ஒரே ஒரு நிபந்தனை மட்டும் இருக்கிறது. அந்தக் காஞ்சி நகரத்து நாட்டியப் பெண்ணை நீ தியாகம் செய்துவிட வேண்டும்!"

பெண் புலியின்மீது வேலை எறிந்து கொன்ற வேடனை ஆண் புலி எப்படிப் பார்க்குமோ, அப்படி நாகநந்தி புலிகேசியைப் பார்த்தார்!

'நடனப் பெண்ணின் சரணாகதி' சித்திரத்தை எழுதிய கலைஞனுக்கு என்ன கதி நேர்ந்ததோ, அதே கதி ஒருவேளை புலிகேசிக்கும் நேர்ந்திருக்கக் கூடும். ஆனால் அச்சமயம் வாதாபி நதியின் மறுகரை வழியாக ஏழெட்டுப் பேர் மிக விரைவாய் வந்துகொண்டிருந்தது தெரிந்தது. அந்த ஏழெட்டுப் பேரும் சாமான்ய மனிதர்கள் அல்ல; மந்திரிகள், தளபதிகள் முதலியோர். ஏதோ முக்கியமான, அவசரமான விஷயத்தைச் சக்கரவர்த்தியிடம் தெரிவிப்பதற்காக அவரைத் தேடி வருவதாகவும் தோன்றியது.

இதைக் கவனித்த பிக்ஷு தம் உள்ளத்தில் பொங்கி வந்த குரோதத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு, "ஆ! உன்னுடைய சாம்ராஜ்ய தானத்தில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது, — உன்னுடைய நன்றியறிதலில் கொடிய விஷம் கலந்திருக்கிறது,—என்று சந்தேகித்தேன். அது உண்மையாயிற்று!" என்றார்.

"அண்ணா! நன்றாக யோசித்துச் சொல்லு! சத்யாச்ரய புலிகேசி வீற்றிருந்த சளுக்க குலத்துச் சிம்மாசனத்தில் ஒரு சிற்பியின் மகள் ஏறலாமா? அதற்கு ஒருநாளும் நான் சம்மதிக்க முடியாது. உனக்கும் எனக்கும் மன வேற்றுமை உண்டு பண்ணிய அந்த மோகினிப் பிசாசைத் துரத்தி விடு! துரத்திவிட்டு வாதாபி சிம்மாசனத்தில் ஏறி ஆயுள் உள்ளவரையில் இராஜ்ய பாரத்தை நடத்து!" என்று புலிகேசி உருக்கமான குரலில் கூறினார்.

நாகநந்தியோ பழையபடி நாக ஸர்ப்பத்தைப் போல் சீறிக்கொண்டு, "சண்டாளா! பாதகா! நீ நாசமடைவாய்! உன் தலைநகரம் எரிந்து சாம்பராகும்! உன் சாம்ராஜ்யம் சின்னாபின்னமாகி அழியும்! தேவேந்திரனுடைய பதவி கிடைப்பதாயிருந்தாலும் சிவகாமியை என்னால் தியாகம் செய்ய முடியாது. கேவலம் இந்தச் சளுக்க ராஜ்யத்துக்காகவா அவளைத் தியாகம் செய்யச் சொல்கிறாய்? ஒருநாளும் இல்லை! இப்படி நன்றிகெட்ட வஞ்சகத்துடன் என்னிடம் நடந்து கொண்டதற்குக் கூடிய சீக்கிரம் நீ பலன் அநுபவிக்கப் போகிறாய்! உனக்கும் எனக்கும் இந்த வினாடியோடு எல்லாவித பந்தமும் அற்றுவிட்டது. இனி உன் முகத்திலேயே நான் விழிப்பதில்லை. இதோ நான் போகிறேன். போய்ச் சிவகாமியையும் அழைத்துக் கொண்டு உன் இராஜ்யத்தை விட்டே போய் விடுகிறேன். அதோ வருகிறார்கள், பார்! அவர்கள் உன்னுடைய விநாசச் செய்தியைக் கொண்டு வருகிறார்கள்!"

இப்படி நெருப்பைக் கக்கும் வார்த்தைகளை நாகநந்தி கூறிக் கொண்டிருக்கும்போது நதியின் மறுகரையோடு விரைந்து வந்தவர்கள் மேற்கே சற்றுத் தூரத்திலிருந்த மூங்கில் மரப் பாலத்தின் வழியாக நதியைக் கடந்து சக்கரவர்த்தியும் பிக்ஷுவும் இருந்த பாறையை அணுகினார்கள்.

நாகநந்தி தமது சொல்லைக் காரியத்தில் நடத்தி வைக்கும் பொருட்டு இரண்டு அடி எடுத்து வைத்தவர், புனராலோசனை செய்து தமது எண்ணத்தை மாற்றிக் கொண்டவர் போல் தயங்கி நின்றார். வருகிறவர்கள் என்ன செய்தி கொண்டு வருகிறார்கள் என்று நிச்சயமாய்த் தெரிந்து கொள்ளும் பொருட்டு அவர் அவ்விதம் நின்றார் போலும்.


களங்கமற்ற மேனிக்கு
KANTI
காந்தி
சோப்
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ்
லிமிடெட், பம்பாய் 15

வந்தவர்கள் எல்லாருடைய முகத்தி லும் கவலையும் பீதியும் குடிகொண் டிருப்பதைப் பார்த்த சக்கரவர்த்தி மிக்க வியப்படைந்து, "எல்லாரும் கும்பலாக வந்திருக்கிறீர்களே? என்ன விசேஷம்? ஏதாவது முக்கியமான செய்தி உண்டா?" என்று கேட்டார்.

"ஆம், பிரபு! முக்கியமான செய்தி வாதாபியி லிருந்து வந்திருக்கிறது. நம்பவே முடியாத செய்தி. சொல் வதற்கும் தயக்கமா யிருக்கிறது!" என்று சளுக்க சாம்ராஜ்யத்தின் பிரதம மந்திரி கூறினார்.

"அதென்ன அவ்வளவு முக்கியமான செய்தி? எங்கிருந்து யார் கொண்டு வந்தார்கள்! ஏன் எல்லாரும் இப்படிப் பயந்து சாகிறீர்கள்? யாராவது பகை வர்கள் சளுக்க சாம்ராஜ்யத்தின் மீது படையெடுத்து வருகிறார்களா? சீக்கிரம் சொல்லுங்கள்!"

"மகாப் பிரபு! தாங்களே சொல்லி விட்டீர்கள்!"

"இது என்ன பிதற்றல்? நான் என்ன சொன்னேன்?"

"பகைவர்கள் சளுக்க ராஜ்யத்தின் மீது படையெடுத்து வருவதாகச் சொன்னீர்கள்."

"அதுவா உண்மை?"

"ஆம், சக்கரவர்த்தி!"

"அதிசயமான செய்திதான். யார் அந்தச் சத்துரு? வடக்கே, ஹர்ஷரா யிருக்க முடியாது. அவரிடமிருந்து சமீபத்திலே சிநேகம் நிறைந்த அழைப் புக் கடிதம் வந்திருக்கிறது. மற்றப்படி மேற்கேயும் கிழக்கேயும் சத்ருக்கள் இல்லை. வந்தால், தெற்கேயிருந்துதான் வரவேண்டும். யார், காஞ்சி மாமல்லன் படையெடுத்து வருகிறானா?"

"அப்படித்தான் தகவல், பிரபு!"

"ஒருநாளும் நான் நம்பமாட்டேன். அப்படியே யிருந்தாலும் எதற்காக நீங்கள் இப்படிக் கலக்க மடைந்திருக் கிறீர்கள்? என்ன முழுகிப் போய் விட்டது?"

"பெருமானே! நம்முடைய சைன் யத்தில் பெரும்பகுதி நர்மதைக் கரை யில் இருக்கிறது. இன்னொரு பெரும் பகுதி வேங்கியில் இருக்கிறது......"

"அதனால் என்ன? மாமல்லன் காஞ்சியிலிருந்து வருவதற்குள் நம் முடைய சைன்யங்களை வாதாபிக்குக் கொண்டுவர முடியாதா!"

"மாமல்லன் காஞ்சியில் இல்லை, பிரபு! பல்லவ சைன்யம் வடபெண்ணை யைக் கடந்து ஒரு வாரம் ஆகிறது. இப்போது துங்கபத்திரையை நெருங்கி யிருக்க வேண்டும்."

"இது என்ன விந்தை? செய்தி யார் கொண்டு வந்தது?"

"இதோ இவர்கள் வாதாபியிலிருந்து கொண்டு வந்திருக்கிறார்கள். இரவு பகல் எங்கும் தங்காமல் விரைந்து வந்திருக்கிறார்கள்!" என்று பிரதம மந்திரி சொல்லி இரு தூதர்களை முன்னால் நிறுத்தினார்.

"உங்களை யார் அனுப்பினார்கள்? ஓலை ஏதாவது கொண்டுவந்தீர்களா?"

"இல்லை, பெருமானே! ஓலை எழுது வதற்குக் கூட நேரமில்லை. வாதாபி கோட்டைத் தலைவர் வாய்மொழியாகச் செய்தி சொல்லி அனுப்பினார். நாங்கள் ஆறுபேர் ஐந்து நாளைக்கு முன்பு கிளம்பினோம். வழியில் நாலு பேர் விழுந்து விட்டார்கள். இரண்டு பேர் தான் மிஞ்சி வந்து சேர்ந்தோம்."

"மந்திரி! இவர்கள் பேச்சு உண் மையா யிருக்க முடியுமா? மாமல்லன் இலங்கைப் படை யெடுப்புக்காகக் கப்பல்கள் கட்டிக் கொண்டிருப்பதாக வல்லவா நாம் கேள்விப்பட்டோம்?"

"ஆம், பிரபு! நம்புவதற்குக் கஷ்ட மாகத்தான் இருக்கிறது. ஆயினும் இவர்கள் வாதாபி கோட்டைத் தலைவ ரின் இலச்சினை கொண்டு வந்திருக் கிறார்கள். இவர்களுக்குப் பின்னால் விவரமான ஓலையோடு வேறு தூதர் களும் வருகிறார்களாம். இவர்கள் சொல்வது உண்மையா யிருந்தால், பல்லவ சைன்யம் இப்போது துங்கபத் திரையைக் கடந்திருக்க வேண்டும். துங்கபத்திரைக் கரையிலிருந்த சைன் யத்தை அந்தப் பிரதேசத்தில் பஞ்சம் என்று கொஞ்சநாளைக்கு முன்புதான் வேங்கிக்கு அனுப்பினோம்."

புலிகேசி சற்று நேரம் ஸ்தம்பித்து நின்றார். சட்டென்று அவர் மனதில் ஏதோ ஒரு உண்மை உதயமாகியிருக்க வேண்டும். சற்றுத் தூரத்தில் நின்று மேற்படி சம்பாஷணையை யெல்லாம்

கேட்டுக் கொண்டிருந்த நாகநந்தியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

மறுபடியும் பிரதம மந்திரியை நோக்கி, "மந்திரி! நமது ஒற்றர்படை என்ன செய்து கொண்டிருந்தது? மாமல்லன் படையெடுப்பைக் குறித்த செய்தி நமக்கு ஏன் முன்னாலேயே வரவில்லை? காஞ்சியிலிருந்து பல்லவ சைன்யம் புறப்பட்ட செய்தி கூட நமக்கு ஏன் வாதாபியிலிருக்கும் போதே கிடைக்கவில்லை?" என்றார்.

பிரதம மந்திரி வணக்கத்துடன், "பிரபு! ஒரு வருஷத்துக்கு முன்னால் நமது ஒற்றர் படைத் தலைவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அவருடைய பொறுப்பை நமது பிக்ஷு ஏற்றுக் கொண்டார். அடிகளைத்தான் கேட்க வேண்டும்!" என்றார்.

சக்கரவர்த்தி உள்பட அங்கிருந்த அனைவருடைய கண்களும் அப்போது பிக்ஷுவை நோக்கின.

புலிகேசி, "அடிகளே! மாமல்லனுடைய படையெடுப்புச் செய்தி தங்களுக்கு முன்னாலேயே தெரியுமா? வேண்டுமென்று என்னிடம் சொல்லாமல் மறைத்து வைத்திருந்தீர்களா?" என்று கேட்டார்.

"தம்பி! உன் கேள்விக்கு இவர்கள் எல்லாருடைய முன்னிலையிலும் நான் மறுமொழி சொல்ல வேண்டுமா?" என்றார் பிக்ஷு.

"அடிகளே! சற்று முன்னால் சொன்னதை மறந்து விட்டீர்களா? தங்களுக்கும் எனக்கும் இனி யாதொரு சம்பந்தமும் உறவும் இல்லையென்று சொல்லவில்லையா? இப்போது என்னத்திற்காக உறவு கொண்டாட



வேண்டும்? உண்மையை உடனே சொல்லுங்கள்!''

"அப்படியானால் சொல்கிறேன். மாமல்லன் படையெடுப்புச் செய்தி எனக்கு முன்னமே தெரியும். நன்றியில்லாத பாதகனாகிய உனக்குத் தண்டனை கிடைக்கும் பொருட்டே உன்னிடம் சொல்லவில்லை!'' என்று நாகநந்தி கர்ஜித்தார்.

"இந்த தேசத் துரோகியைப் பிடித்துக் கட்டுங்கள்!'' என்று சக்கரவர்த்தி கட்டளையிட்டதும், அங்கு நின்ற எட்டுப் பேரும் பிக்ஷுவைச் சூழ்ந்து கொண்டார்கள்.

பிக்ஷு மடியில் செருகியிருந்த வளைந்த சிறு கத்தியைப் பளிச்சென்று எடுத்துக் கொண்டு, "ஜாக்கிரதை! அருகில் நெருங்கியவன் உடனே யமலோகம் போவான்!'' என்றார்.

எட்டுப் பேரும் தத்தம் உடைவாள்களை உறையிலிருந்து விரைவாக எடுத்துக் கொண்டார்கள்.

"அப்படிச் செய்யுங்கள்! சூர சிகாமணிகள் எட்டுப் பேர் சேர்ந்து ஒரு பிக்ஷுவைக் கத்தியால் வெட்டிக் கொல்லுங்கள். புலிகேசி சக்கரவர்த்தியின் பெருமை உலகமெல்லாம் பரவும். மாமல்லன் கூடப் பிரமித்துத் திரும்பிப் போய் விடுவான்!'' என்று பிக்ஷு பரிகாசக் குரலில் கூறினார்.

அதைக் கேட்ட புலிகேசி, "நில்லுங்கள்! அந்த நீசத் துரோகியைக் கொன்று உங்கள் கத்தியை மாசுபடுத்திக் கொள்ள வேண்டாம்! விலகுங்கள்!'' என்று கூவினார்.

அவ்விதமே எட்டுப் பேரும் விலகிக் கொண்டார்கள். எனினும் சக்கரவர்த்தியின் பேரில் பிக்ஷு பாய்ந்து விடக்கூடும் என்று எண்ணி ஜாக்கிரதையாகவே நின்றார்கள்.

பிக்ஷுவைப் பார்த்துப் புலிகேசி சக்கரவர்த்தி கூறினார்:—"அடிகளே! உம்முடைய உயிரை வாங்குவது தவறு. உம்மை நம்பிய சகோதரனுக்கும் உமது நாட்டுக்கும் நீர் செய்த மகா துரோகத்துக்கு அது தக்க தண்டனையாகாது. நீண்ட காலம் நீர் உயிர் வாழ்ந்து உம்முடைய பாவத்துக்குப் பிராயச் சித்தம் செய்து கொள்ள வேண்டும். உம்முடைய துரோகத்தை நினைத்து நினைத்துக் கண்ணீர் விட வேண்டும். மனித உருக்கொண்ட துஷ்டப் பைசாசமே! போ! வாதாபிக்குச் சென்று உன்னுடைய மோகினியையும் அழைத்துக் கொண்டு போ! உன் வாக்கை இந்த விஷயத்திலாவது நிறைவேற்று! இனி என் உயிர் உள்ள வரையில் என் முகத்தில் விழிக்க வேண்டாம்! ஒரு பெண்ணின் மோகத்துக்காக ஒரு ராஜ்யத்தையே விற்கத் துணிந்த ராட்சதனே! போ! நெடுங்காலம் உயிரோடிருந்து உன்னுடைய துரோகத்தை நினைத்து அழுது கொண்டிரு!''

ஆத்திரம் ததும்பிய குரலில் விம்மலோடு கலந்து புலிகேசி கூறிய மேற்படி கடும் மொழிகளைக் கேட்டுக் கொண்டு நாகநந்தி கற்சிலையைப் போல் நின்றார். புலிகேசி நிறுத்தியதும் ஒரு வார்த்தையும் மறுமொழி கூறாமல் நதிக்கரையோடு கிழக்கு நோக்கி நடக்கத் தொடங்கினார்.

பிக்ஷு போகும் திசையையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த புலிகேசி சக்கரவர்த்தி அவர் மறைந்ததும் சட்டென்று திரும்பித் தம் கண்களில் ததும்பிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். பிறகு, அங்கு நின்றவர்களைப் பார்த்து, "மந்திரி! சேனாபதி! இந்தத் தூதர்கள் கொண்டு வந்த செய்தி உண்மையாகத்தான் இருக்க வேண்டும். புத்த பிக்ஷுவின் விஷயத்தில் நீங்கள் எல்லாரும் செய்த எச்சரிக்கையை நான் அலட்சியம் செய்து விட்டேன். அதன் பலனை நானும் நீங்களும் அநுபவிக்கப் போகிறோம். என்றாலும், மோசம் ஒன்றும் போய் விடவில்லை. புலியின் வாய்க்குள்ளே வேண்டுமென்று தலையை விடுதல் விளையாட்டான காரியம் அல்ல என்பதை மாமல்லனுக்குக் கற்பிப்போம். துங்கபத்திரையைக் கடந்து வந்த பல்லவ வீரன் ஒருவனாவது திரும்பிப் போகாமல் ஹதா ஹதம் செய்வோம். என்னுடைய தென்னாட்டுப் படையெடுப்பு பூரண வெற்றியடையவில்லை என்ற குறை என் மனதில் இருந்து வந்தது. அந்த மனக் குறை இப்போது தீர்ந்து விடப் போகிறது. பல்லவ நாடு சளுக்க சாம்ராஜ்யத்தோடு சேர்ந்து ஒன்றாகி விடப் போகிறது!'' என்றார்.



ராஜ்ய பாரம்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

மனிதனுக்கு ஒரு பொருள் கிடைக்கும் வரையில் அதன்மேல் 'மோகம் இருப்பது இயல்பு. தேடிய பொருள் கிட்டியதும் அதன்மேல் வைத்திருந்த ஆசை கரைந்து போய்ப் புதுத் துயரங்களும் சங்கடங்களும் மனிதனைப் பிடிக்கும். போர் புரிவதும் பகைவனைக் கொல்லுவதும் க்ஷத்திரிய தருமமாக இருந்தாலும், சகோதரர்களைக் கொன்று கிடைத்த பதவியும் செல்வமும் என்ன சுகத்தைத் தரும்? இதைத்தான் அருச்சுனன் யுத்தம் ஆரம்பிக்கும் தறுவாயில் கண்ணனிடம் முறையிட்டது. அதற்கு சமாதானமாகக் கண்ணன் கருமத்தைப் பற்றியும் கடமையைப் பற்றியும் உபதேசம் செய்தான். ஆயினும் அருச்சுனன் சொன்னதிலும் பெரிய உண்மை இல்லாமலில்லை. பாண்டவர்கள் கௌரவர்களை ஜெயித்துவிட்டுச் சம்பூரண ராஜ்ய பதவி அடைந்தார்கள். பிறகு கடமையை உத்தேசித்து ராஜ்ய பாரம் வகித்து நடத்தினார்கள். ஆனாலும் எதிர் பார்த்த சந்தோஷம் அடையவில்லை.

"வெற்றி பெற்று ராஜ்யாதிபத்தியம் அடைந்த பாண்டவர்கள் திருதராஷ்டிரனை எவ்விதம் நடத்தினார்கள்?" என்று ஜனமேஜயர் கேட்க, வைசம்பாயனர் கதையைச் சொல்லுகிறார்:

துக்க சாகரத்தில் மூழ்கிய திருதராஷ்டிரனிடம் எல்லாவிதத்திலும் கௌரவம் காட்டியே பாண்டவர்கள் ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தார்கள். எல்லாக் காரியங்களையும் திருதராஷ்டிரனிடம் தெரிவித்து அவனுடைய அனுமதி பெற்றே ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தார்கள். தான் பெற்ற நூறு மக்களையும் கனவில் பெற்ற தனத்தைப் போல் இழந்த காந்தாரியைக் குந்திதேவி மிகவும் அன்போடும் பக்தியோடும் பார்த்து வந்தாள். திரௌபதியானவள் அவர்கள் இருவரையும் சமமாகவே பாவித்துப் பணிவிடை செய்து வினயமாக நடந்து கொண்டாள். திருதராஷ்டிரனுடைய மாளிகையில் அவனுக்காகச் சிறந்த சயனாசனங்களையும் ஆடையாபரணங்களையும் யுதிஷ்டிரன் அமைத்தான். அவனுக்கு வேண்டிய ஆகாரங்களையும் செய்து அனுப்பினான்.

கிருபாச்சாரியர் திருதராஷ்டிரனுடன் வசித்து வந்தார். வியாசர் அவனுக்கு

ஆறுதல் கொடுக்கக் கூடிய கதைகளைச் சொல்லிக் கொண்டு வந்தார். அரசியல் விவகாரங்களை யுதிஷ்டிரன் திருதராஷ்டிரனை அவ்வப்போது கேட்டு அவனுடைய அனுமதியின் மேல் செய்வது போலவே செய்து வந்தான். ராஜாவான தருமபுத்திரன் திருதராஷ்டிரனுக்கு வருத்தம் வரக் கூடிய பேச்சு ஏதும் பேசாமல் ஜாக்கிரதையாக இருந்தான்.

பலதேசங்களிலிருந்து வரும் மன்னர்கள் கௌரவ சிரேஷ்டனை திருதராஷ்டனை முன் போலவே மகாராஜனாக உபசரித்தனர். ஸ்திரீகள் காந்தாரிக்குப் பணிவிடை செய்வதில் ஒரு குறையும் இல்லாமல் பார்த்து வந்தார்கள். யுதிஷ்டிரன் "புத்திரர்களை இழந்த இவர் சிறிதும் துயரப்படாமலிருக்க வேண்டும்" என்று தன் சகோதரர்களுக்கு உத்தரவிட்டிருந்தான்.

இவ்விதம் திருதராஷ்டிரன் யுதிஷ்டிரனால் நன்கு பூசிக்கப்பட்டுத் தன் புத்திரர்கள் ஜீவித்திருந்தால் எவ்வளவு சுகம் கிடைக்குமோ அவ்வளவு சுகத்தையும் போகங்களையும் அடைந்தான். திருதராஷ்டிரனும் பாண்டவர்களை அன்போடு பார்த்து வந்தான். அவர்களிடம் சிறிதும் அபிப்பிராய பேதம் காட்டவில்லை.

பாண்டவர்களில் பீமன் மட்டும் அப்பிரியமான காரியங்களைச் சில சமயம் செய்வான். ரகசியமாக ஆட்களைக் கொண்டு அவனுடைய கட்டளைகள் நடக்க வொட்டாமல் செய்து வந்தான். "மந்த மதியினரான துரியோதனாதிகள் கொல்லப்பட்டனர்" என்று திருதராஷ்டிரன் காதில் விழும்படி சொல்லுவான். துரியோதனன், கர்ணன், துச்சாதனன் இவர்களுடைய செயலை எண்ணி யெண்ணித் தன் கோபத்தை மறக்கவோ அடக்கவோ அவனால் கூடவில்லை. அதனால் சில சமயம் திருதராஷ்டிரனுக்கும் காந்தாரிக்கும் கேட்கும்படியாகக் கூடக் கடுமையான வார்த்தைகளைச் சொல்லுவான்.

பீமனுடைய வார்த்தைகளும் சில்லறைக் காரியங்களும் திருதராஷ்டிரன் மனதைக் குத்தும். இதைக் கண்டு காந்தாரியும் வருத்தப்பட்டாள். ஆனால் அவள் மகா விவேகசாலி. தர்மம் அறிந்தவள். பீமன் சொல்லும் அப்பிரிய வசனங்களைக் கேட்கும்போதெல்லாம் தருமமே வடிவங் கொண்டது போல் விளங்கும் குந்திதேவியைப் பார்த்து மனதில் சாந்தம் அடைவாள். இவ்வாறு பதினைந்து வருடங்கள் கடந்தன.

தட்டியும் கோலமும்

ரா. வி.

சென்னையில்

"ப்ரஸ—" "நாம் போட்ட 'புரோகிராமி'லே மண் விழுந்தூடுத்து!"

"ஏன், என்ன?"

"ரகு சகுந்தலாவையும் அழைச்சிண்டு இங்கு வரப்போவதாகக் கடிதம் எழுதியிருக்கான். இங்கே ஒரு மாசமாவது 'காம்ப்' போடலாம்னு இருக்கானும்!"

"அப்படியா! அப்படின்னு நாம் ஊட்டிக்குப் போற 'புரோகிராமை' நிறுத்திப்பிட வேண்டியதுதான்!"

"சே! உன்மாதிரி அசடை நான் பார்த்ததே இல்லே! குஷியாக ஊட்டிக்குப் போய்ட்டு வருவோம்னு, நிறுத்திப்பிடுவோம் என்கிறயே!" என்முன் விசுவம்.

"பின்னே என்ன பண்றது, நீங்களே சொல்லுங்கோ! சகுந்தலாவைப் பார்த்து இரண்டு வருஷமாச்சு! குழந்தை விளையாடிண்டிருக்கானுமா?"

"நன்னுக் கொட்டம் பண்ணிண்டு இருக்கானும். ஆமாம், அவாளை இப்போ இங்கே வராமே எப்படிப் பண்றது?"

"வராதேன்னு எழுதினு நன்னயிருக்குமா? வரச் சொல்லியே எழுதுங்கோ. என்ன பண்றது? அடுத்த வருஷம் பொழைச்சுக் கிடந்தா போனுப் போச்சு!"


"போ! அவன் வந்தாச் செலவாகிற பணத்தைக் காட்டிலும் குறைச்சல் செலவிலேயே குஷியா ஊட்டிக்குப் போய்ட்டு வந்துடலாம்...... ஆனால் நீயோ பணத்தைக் கரியா அடிக்கிறதுக்கு நல்ல யுக்தி சொல்லிக் கொடுக்கிறே!"

"எனக்கு வேறே ஒண்ணும் தோணலே உங்க இஷ்டப்படி செய்யுங்கோ!"

"சரி. இந்த யோசனை தான் உன்னிடம் கேட்க வந்தேனுக்கும்!"

"அப்படின்னு காலைக்குக் கடுதாசி எழுதுங்கோ. அதுக்குள்ளே ஏதாவது யோசனை சொல்றேன்."

"சரி, பார்ப்போம் உன் சாமர்த்தியத்தை!" என்முன் விசுவம்.



தாத்தா:—ஏண்டா பல் டாக்டர் வீட்டுக்கு வருகிற தென்னால் இப்படி அழறே? நானும் தான் வரேன். உன்னூட்டும் அழறேனு பார்!

பங்களூரில்

"சகுந்தலா! விசுவத்திண்டேயிருந்து கடுதாசி வந்திருக்கு?"

"எங்கே, கொடுங்கோ பார்க்கலாம்!"

அன்புள்ள ரகுவுக்கு.

உனது கடிதம் கிடைத்தது. இரண்டு வருஷம் கழிந்தாவது எங்கள் நினைப்பு வந்ததே. அதைப் பொறுத்த வரையில் ரொம்ப சந்தோஷம். லீவு விட்டவுடன் சகுந்தலாவையும் குழந்தையையும் அழைத்துக்கொண்டு வந்து சேரு.

ஒரு சந்தோஷச் செய்தி உனக்குச் சொல்ல வேண்டாமா? சரஸாவுக்கு இது ஆறுவது மாஸம்...... இப்போலே அது அவளைப் படாத பாடுபடுத்தி வைக்கிறது! ரொம்ப சிரமப் படறு!

ஒரு வாரம் முந்திதான் கடுதாசி எழுதிச் சகுந்தலாவை வரவழைக்கனும்னு சொன்னு. இங்கே அவள் வந்தால் கொஞ்சம் பொழுது போகும். கூடமாட வீட்டுக் காரியத்தையும் கவனித்துக் கொள்வாள் என்று சொன்னு... நான்தான் எழுதமாட்டேன் என்று சொன்னேன். நல்ல வேளை, உன் கடுதாசி வந்தது. உடனே புறப்பட்டு வரச் சொல்லி எழுதச் சொன்னு நீ அதிக நாள் இருக்க முடியாவிட்டாலும் பாதகமில்லே. சகுந்தலாவை இங்கே நீ விட்டுவிட்டுப் போக வேண்டும் என்பது எங்கள் விருப்பம். ஆனால் நீ என்ன சொல்வாயோ! எல்லாவற்றிற்கும் உடனே புறப்பட்டு வா. எந்த வண்டியில் வருகிறாய் என்று தெரிவித்தால் நானே ஸ்டேஷனுக்கு வருகிறேன்.

உனதன்புள்ள

விசுவம்.

"என்ன, உன் அபிப்பிராயம் என்ன? எப்போ புறப்படலாம்?"

"ஒண்ணும் போகவேண்டாம். ஏதோ ஒரு மாசம் போய் 'ஹாயா' இருந்துட்டு

வருவோமே என்று நினைச்சேன். செக்கு மாட்டாட்டமா உழைப்பதற்கு என்னால் ஆகாது?''

"வரேன்னு எழுதின பிறகு போகாமே இருந்தா நன்னாயிருக்குமா? அதெல்லாம் போய்த்தான் ஆகவேண்டும்!''

"ஏதாவது சாக்குப் போக்குச் சொன்னா சரியாப் போச்சு. வேறே எங்கேயாவது போவோமே!''

"என்ன பதில் எழுதுகிறது?''

"எனக்கும் இரண்டு மூன்று மாதமாய்க் கொஞ்சம் சந்தேகமாத் தானிருக்கு, அதனால் வரவில்லை என்று எழுதி விடுங்களேன்?''

"நிஜமாகவா?''

"அதை யெப்படி இப்பவே சொல்ல முடியும்?''

"சரி, எழுதிவிடறேன்'' என்று புன்னகையுடன் பதில் சொன்னான் ரகு.

உதகமண்டலத்தில்

"சரஸு''

"ஏன்?''

"நீ என்ன இருந்தாலும் கெட்டிக்காரி தான்!'' என்று புகழ்ந்தான் விகவம்.

"என்ன!''

"ரகுவையும் சகுந்தலாவையும் ஏமாத்திப்பிட்டு வந்தூட்டோமல்லியோ?''

"ஒரு 'ப்ரோகிராம்' போட்டோம்னா அதன்படி நடக்க வேண்டாமோ?''

"இந்த பங்களா எப்படி?''

"ரொம்ப ஜோராத் தானிருக்கு......... ஆனால் இன்னொரு 'போர்ஷனு'க்கு யார் வரப் போறாளாம்—தெரியுமோ?''

"இன்னும் தெரியவில்லை.''

விகவமும் சரஸுவும் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே, வாசலில் ஒரு கார் வந்து நின்றது. காரிலிருந்து இறங்கிய, ரகுவும் சகுந்தலாவும் விகவத்தையும் சரஸுவையும் தாங்கள் ஏமாற்றிவிட்டு, உதகமண்டலம் வந்து சேர்ந்த விஷயத்தைப் பற்றிப் பேசியவாறே உள்ளே நுழைந்தனர்.

விகவம், காரில் வந்தவர்களைப் பார்க்க எண்ணி வெளியில் வந்தவன், ரகுவையும் சகுந்தலாவையும் கண்டு பிரமித்து, வைத்த கண் வைத்தபடியே நின்றான். ரகு மட்டும் என்ன! அப்படியே திகைத்துப் போய் மேலே அடி எடுத்து வைக்கக் கூட முடியாமல் தடுமாறி நின்றான்.

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.


137. கோடாலிக் காம்பு!

ராமனது கட்டளைப்படி படைகள் ஆரவாரத்தோடும் நீண்ட நீண்ட கொடிகளோடும் திரளுவதைப் பார்த்தோம்.

அந்தப் படை வீரர்களது உருவத்தைப் பார்த்தால், ஏதோ கட்டுத் தறிகளை முறித்து விட்டு வேகத்தோடு வந்த மத யானைக் கூட்டம் என்றே சொல்லத் தோன்றும்.

தறியின் நீங்கிய
    தாழ்தடக் கைத்துணைக்
குறிகொள் மாமத
    வேழக் குழூஅனார்,
செறியும் வானொடு
    வாள் இடை தேய்த்துகும்
பொறியில், கான் எங்கும்
    வெங்கனல் பொங்கவே.

[தறியின் நீங்கிய: கட்டுத்தறியை விட்டு நீங்கிய; தாழ் தடக்கைத் துணை: தாழ்ந்து பெருத்த துதிக்கைகள் இரண்டு கொண்ட; குறிகொள் மாமத வேழக்குழூ அன்னார்: எதிர்களைக் கொல்லுவதற் கென்றே புறப்படும் மதயானைக் கூட்டம் போன்றவர்; செறியும்: நெருங்கி நிறைந்த; வானொடு வாள் இடை தேய்த்து உகும் பொறியில்: வாள்கள் வாள்களோடு தேய்ப்பதன் காரணமாகச் சிதறும் தீப்பொறியினால்; கான் எங்கும் வெம் கனல் பொங்கவே: காடெல்லாம் பெரு நெருப்புப் பற்றி எரிய.]



“என்ன டாக்டர் ஸார்! கேஸ் எப்படி இருக்கு? உங்களால் பார்க்க முடியுமா?”
“இந்தக் கேஸை என்னிடம் ஒப்புவிப்பதைவிட வக்கீலிடம் ஒப்புவியுங்கள்.”
“ஏன் டாக்டர் அப்படிச் சொல்லுகிறீர்கள்?”
“அதுதான் ஸார்! வக்கீலைக் கூப்பிட்டு வந்து, அவர் சொத்துக்கெல்லாம் ஏதாவது ஏற்பாடு செய்யுங்கோ.”

நாமும் அந்தப் படை வீரர்களோடு நடந்து செல்லுகிறோம். அவர்களுடைய பெருத்த உடம்புகளைப் பார்த்தால் எப்படி யெல்லாமோ நினைவுகள் வருகின்றன:

ஆதிசேஷனாகிய சர்ப்பம் பூமியைத் தூக்கிக் கொண்டிருக்கிறது. சர்ப்பம் கொஞ்சம் தலையைக் கீழே போட்டது. உடனே பூமியின் மேற்புறம் நெளிந்து கீழே போயிற்று. அவ்வளவுதான்! உலகத்திலுள்ள மலைகள் எல்லாம் பள்ளத்தில் தொடு பிடியாக வந்து இறங்கி நின்றனவாம்.

இத்தகைய நினைவுகள்தான் வருகின்றன, படை வீரர்களைப் பார்த்தால்.

தலையில் மாசுணம்
    தாங்கிய தாரணி
நிலைநி லாது
    முதுகைநெ ளிப்புற,
உலையில் ஏழ்உல—
    கத்தினும் ஓங்கிய
மலையெ லாம்ஒரு
    மாடுநொக் கென்னவே.

[தலையில் மாசுணம் தாங்கிய: தலையில் வைத்து ஆதிசேஷனாகிய சர்ப்பம் தாங்கிய; தாரணி நிலை நிலாது முதுகை நெளிப்புற: பூமியானது ஒரு நிலையில் நில்லாமல் முதுகை நெளிக்க — பூமியதிர்ச்சியிற் போல; ஏழ் உலகத்திலும் ஓங்கிய மலை எலாம்: ஏழு ஏழு கண்டங்களிலும் உயர்ந்தோங்கி அசையாது நிற்கும் மலைகள் எல்லாம்; ஒரு மாடு நொக்கு என்னவே: ஒரு பக்கத்திலேயே புரண்டு வந்து கூடி நின்றது போல.]

யோகிகள் காரியம் நமக்குத் தெரியும். உலகப் பற்றுகளை எல்லாம் ஒதுக்கிக் கொள்ளுவார்கள். அவர்கள் பூர்வ வினைகளையும் இல்லாமல் ஒழித்துக் கொள்ளுவார்கள். மனச் சாந்தி காரணமாகவும், வரையறுத்து உணவு உண்ணுதல் காரண

மாகவும், சாதாரணமாக நோய் என்பது அவர்களை அணுகுவதில்லை.

ஆனாலும், பிறந்தது முதலே உடன் தங்கி வருகின்றன சில நோய்கள், யோக சாதனங்களாலும் தள்ள முடியாதபடி உடலில் மறைந்து கிடக்கின்றன. அவை கடைசியில் அந்த யோகிகளையே எமனுக்கு இரையாக்கி விடுகின்றன. யோகிகள் பாடு இது வென்றால், மற்ற மக்கள், பிராணிகளைப் பற்றிச் சொல்லவா வேண்டும்!

சூர்ப்பனகை யானவள் அரக்கர் குலத்தில் அரக்கரோடு அரக்கியாய்ப் பிறந்து வளர்ந்து வந்தவள். அடடா, அவளே அந்த அரக்கர்களை ராமனது அம்புக்கு இரையாகும்படி கொண்டு வந்து விடுகிறாள்.

நோய் என்றால், அப்படி அல்லவா கொண்டு வந்து விடவேண்டும்!

சந்தம்

தானன தானன தன்
தானன தானன தன்

வந்தது சேனைவெள் ளம்
வள்ளியோன் மருங்குமா ய
பந்தமா வினையைமா ளப்
பற்றறு பெற்றியோர்க் கும்,
உந்தரு நிலையதா கி,
உடன்உறைந்(து) உயிர்கள்
தம் மை
அந்தகற்(கு) அளிக்கும்நோய் போல்,
அரக்கிமுன் னாகஅம் மா!

[உந்தரு நிலையதாகி உடன் உறைந்து: தள்ள முடியாதபடி உடலோடு ஒட்டி உறைந்து: உயிர்கள் தம்மை: எல்லா உயிர்களையுமே: அந்தகற்கு அளிக்கும் நோய் போல்: எமனுக்கு இரையாகக் கொடுக்கும் ஒரு நோயைப் போல: அரக்கி முன்னாக அம்மா: அரக்கி முன்னால் நடக்கச் சேனை பின்னால் வந்தது!]

அரக்கர் குலத்தை ஒழிக்கும் பெருமையைச் சூர்ப்பனகைக்கே கொடுக்கிறார் கவிஞர். சூர்ப்பனகையை ஏவுதல் கர்த்தா என்றும், ராமனை சாதாரண இயற்றுதல் கர்த்தா என்றும் சொல்ல வேண்டுமாம். விதி செய்கிற வேலை அவ்வளவு ஜோராய் இருக்கிறது, கவிஞருக்கு!

○ ★ ○



காலக்ஷேபம்

ரொம்ப சரி!

பிரசங்கி:—அன்பர்களே! நாம் ஒருவனுக்கு ஒன்றைத் தானமாகக் கொடுத்தால் அதுவே நமக்கு இரட்டிப்பாகத் திரும்பக் கிடைக்கும்!

கூட்டத்தில் ஒருவர்:— நீங்கள் சொல்வது ரொம்ப சரி; நான் சென்ற வருஷம் என் பெண்ணைத் தானமாகக் கொடுத்தேன். இப்போது பெண் மாப்பிள்ளை இருவருமாக என் வீட்டில் வந்து காலம் கழிக்கிறார்கள்!

—கே. ராமசாமி.

★

வாஸ்தவம்தான்!

போலிங் ஆபீஸர் (தச்சு வேலை செய்யும் ஒரு வோட்டரிடம்):—உமக்கு இஷ்டமான பெட்டியில் வோட்டைப் போட்டுவிட்டு வாரும்.

தச்சு வேலைக்காரர் (பெட்டிகளைப் பார்த்து விட்டுத் திரும்பிவந்து):— எல்லாப் பெட்டிகளிலும்தான் ஏற்கெனவே 'ஓட்டை' போட்டிருக்கே ஐயா!

—சா. க. அய்யர்.

★

சங்கடம்தான்!

குமாஸ்தா (நண்பரிடம்):—எங்கள் ஆபீஸர் வேறு ஊருக்கு மாற்றலாகிப் போவது மனசுக்கு ரொம்பவும் சங்கடமாயிருக்கு, ஸார்!

நண்பர்:—அவர் உங்களிடம் ரொம்ப அன்பாக நடந்து கொண்டாராக்கும்?

குமாஸ்தா:—இல்லே; அவருக்குத் தேநீர் விருந்து அளிப்பதற்காக என்னையும் மூன்று ரூபாய் கேட்கிறார்கள்! —ஏ. பார்வதி தேவி.

★

நல்ல கேள்வி!

வீடு விற்பனை செய்யும் ஒருவன் வீட்டுச் சொந்தக்காரர் ஒருவரின் கோபத்திற்கு ஆளானான்.

வீட்டுக்காரர்:— இன்னும் முப்பது விநாடிகளுக்குள் நீ இவ்விடத்தை விட்டுப் போகாவிட்டால் ......?

வியாபாரி (புன்சிரிப்புடன்):—அந்த முப்பது விநாடிகளுக்குள் நான் உங்களுக்கு என்ன விற்கட்டும்? —வி. எஸ். சுந்தரராஜன்.

★

இல்லாத குறை!

டாக்டர் (நோயாளியின் மனைவியைப் பார்த்து):— நான் சொன்னபடி மருந்தைக் கொடுத்தீர்களா?

நோயாளியின் மனைவி:— கொடுத்தேன்; நீங்கள் கால் ரூபாய் எடைக்கு அந்தப் பவுடரைக் கொடுக்கச் சொன்னீர்கள். வீட்டில் கால் ரூபாயாக இல்லாததால், நாலு ஓரணா எடைக்கு அந்த மருந்தைக் கொடுத்தேன்!

—எம். கி. பாலசுப்ரமணியன்.

பையன் யோசனை

கண்ணனைப் படிப்புக்காக அவன் தந்தை வெளியூரிலிருந்த தமது தமக்கை வீட்டுக்கு அனுப்பினார். ஐந்து நாட்களுக்குப் பிறகு கண்ணன் பின் வருமாறு கடிதம் எழுதினான்:

"அன்புள்ள அப்பா! 'இந்த உலகமும், நாமும் ஒரு நாள் அழிந்து விடுவோம்' என்று என் வாத்தியார் சொல்கிறார். இருக்கிற வரையில் நாம இருவரும் சேர்ந்தே இருப்போமே! அங்கேயே வந்து விடட்டுமா?"

—கி. விநாயகமூர்த்தி.

★

பரோபகாரம்!

"அம்மாமி! உங்காத்திலிருக்கும் சின்ன வாணலியை எங்கம்மா வாங்கின்டு வரச் சொன்னாள்."

"என்னத்துக்கடா கொழந்தே, வாணலி?"

"நல்லா இன்டுவதற்கு."

"நீ போடா குழந்தை. உன்னால் அதைத் தூக்க முடியாது. நானே எடுத்துண்டு வரேன்." —வி. மாணிக்கம்.

★

ரேஷன் வேடிக்கை

ஒருவர் (ரேஷன் ஆபீஸரிடம்):— ஐயா, எனக்கு ஆறு மரக்கால் நெல் அரைக்கணும். அதற்கு பர்மிட் கொடுங்கள்.

ரேஷன் ஆபீஸர்:—ஏய், உனக்கு எப்படி நெல் கிடைத்தது? அதைச் சொல் முன்னால்.

ஒருவர்:—அதாங்க, நான் ரேஷன் அரிசியிலிருந்து ஆறு மாதமாகப் பொறுக்கிச் சேர்த்தது. —என். பத்மாவதி.

★

தரகர் எப்படி?

பெண் வீட்டார்:—பையனுக்கு மாத வரும்படி என்னவோ?

தரகர்:—சுமார் நூறு ரூபாய் கிடைக்கும்.



பெண் வீட்டார்:—நான் சீதனமாக ஒரு பங்களா கொடுப்பதாகச் சொன்னேனே, அதன் வாடகை நூறு ரூபாயும் சேர்த்தா?

தரகர்:—அதையும் சேர்த்துத்தான் பையன் வரும்படியைச் சொன்னேன்!

—எஸ். குருசாமி

குண்டலகேசி





[தலைப்பைக் கண்டதும் இது ஏதோ பழங் காப்பிய மாக்கும் என்று நினைத்து விடாதீர்கள்; இது என் அருமை மனைவி சரஸாவுக்கு எழுதிய கடிதம்.]

அன்புள்ள சரஸா! சூரியோதயம் வந்தே தீரும் என்ற முழு நம்பிக்கையோடு இருண்டிருக்கும் இரவு போல, "உன்னுடைய கடிதம் இன்று எப்படியும் வந்தே தீரும்" என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

"தபால் ஸார்!" என்ற குரல் கேட்டது.

பணியாள் தபால் குவியலை என் முன் கொண்டு வந்து வைத்தான். பரபரப்புடன் உன் கடிதத்தைத் தேடினேன். உன்னுடைய நீல நிறக் கவர் கிடைத்தது. 'ஆனந்தத்தினால் மனிதன் இளைஞனாகிறான்' என்று சொல்லுகிறார்கள். ஏற்கெனவே நான் இளைஞனானபடியால், உன் கடிதத்தைப் படித்த ஆனந்தத்தில், நான் பாப்பாவாகி விட்டேன்.

"அந்தப் பூவாயியின் கதையை எழுதமாட்டீர்களா?" என்று இதுவரை நூறு தடவை கேட்டு விட்டாய். நீ நேரில் கேட்டபோதெல்லாம் கூட அந்தத் துயரக் கதையை உன்னிடம் சொல்ல வேண்டாம் என்று மழுப்பியே வந்தேன். ஆனால் நீயோ 'விடேன் தொடேன்' என்று கடிதத்திற்குக் கடிதம் "பூவாயியின் கதையை எழுத மாட்டீர்களா?" "எழுத மாட்டீர்களா?" என்று எழுதிக் கொண்டேயிருக்கிறாய்.

டாக்டரிடம் வெட்கப்பட்டால் முடியுமா? அதேபோல் உன்னிடம் இன்றைக்கோ நாளைக்கோ எல்லா விஷயத்தையும் சொல்லத்தானே வேண்டும்?

பூவாயியின் தகப்பன் முருகன், தாய் காச்சம்மை இருவரும் நமது வீட்டில் நான் பிறக்கு முன்பே குடியிருந்து வந்தவர்கள். முருகன் தோட்ட வேலை, வண்டி ஓட்டுகிற வேலை முதலிய வற்றைச் செய்து வந்தான். காச்சம்மை வீட்டு வேலைகளுக்கு என் தாயுடன் ஒத்தாசையாக இருந்து வந்தாள். என்னைத் தூக்கிக் கொண்டு விளையாடுவதில் முருகனுக்கு ஒரு தனி ஆனந்தம். பார்க்கப் போனால் என்னை வளர்த்தவர்களே முருகனும் காச்சம்மையும்தான்!

சின்ன அண்ணாமலை

எனக்கு வயது ஐந்தானபோது நாச்சம்மைக்கும் முருகனுக்கும் பூவாயி பிறந்தாள். "கொஞ்சம் நேரம் முந்திப் பிறந்திருந்தால் ராஜா வீட்டில் பிறந்திருப்பாள் இந்தக் குட்டி" என்று பூவாயியைப் பார்த்தவர்கள் சொல்லிக் கொண்டார்களாம். அவளுக்கு ஒரு வருஷம் பூர்த்தியாயிற்று. மஞ்சு விரட்டில் மாடு பிடிக்கப் போன முருகனை ஒரு மாடு குத்தியதால், அவன் படுத்த படுக்கையாகச் சில நாட்கள் கிடந்து இறந்து விட்டான். நாச்சம்மையும் பூவாயியும் எங்கள் ஆதரவில் வசித்து வந்தனர்.

யுத்தத்தினால் சிங்கப்பூர் சென்ற என் தகப்பனார் திரும்பி வர முடியாமல் அங்கேயே தங்கி விட்ட விவரம் உனக்கு ஏற்கெனவே தெரியும். எங்கள் சொத்தெல்லாம் சிங்கப்பூரில் தான் இருக்கிறது.

நான் சிறு வயது முதல் ஒவ்வொரு நிமிஷத்தையும் பூவாயியுடனேயே கழித்திருக்கிறேன். பொழுது போவதே தெரியாமல் நாங்கள் தோட்டத்தில் எத்தனையோ முறை விளையாடி யிருக்கிறோம். அவள் வளர்ச்சியை நிமிஷத்திற்கு நிமிஷம் நான் அறிவேன். வயது ஆக ஆக அவளுடைய வளர்ச்சி வளர் பிறைச் சந்திரன் போல ரம்யமாக இருந்தது.

காற்று உள்ளே புகக் கூடாதென்று நாம் ஜன்னல்கள், கதவுகள் முதலியவற்றை இறுக்கி மூடி விட்டாலும் எப்படியோ காற்று நம் அறைக்குள் புகுந்து விடுகிறது. அதைப்போலவே எவ்வளவு உறுதியுள்ள நெஞ்சமாக இருந்தாலும் பலஹீனமான எண்ணங்கள் நம் உள்ளத்துக்குள்ளே புகுந்து விடுகின்றன.

நான் இதற்கு விலக்கானவன் அல்ல. என் மனதிலும் பூவாயியைப் பற்றிப் பலஹீனமான எண்ணங்கள் புகுந்து விட்டன. நாச்சம்மைக்கு வயதாகி விட்டதால் அவள் என் வயதான தாயாருடன்தான் எப்பொழுதும் பேசிக் கொண்டிருப்பாள். வயதான இருவர் கூடினால் என்ன பேச்சு நடக்கும்? கேட்பானேன்? மோட்சலோக சாம்ராஜ்யத்தைப் பற்றிய தொண தொணப்புத்தான்!

பூவாயிதான் எங்கள் வீட்டு வேலைகளைச் செய்வாள். நான் குளிப்பதற்கு வேண்டிய வசதி செய்வது, காப்பி தருவது, சாதம் போடுவது, படுக்கை விரிப்பது முதலிய சகல வேலைகளையும் அவள்தான் செய்வது வழக்கம்.

"அண்ணா, அண்ணா!" என்று அவள் என்னை அன்புடன் அழைக்கும்போது, எனக்கு என்னமோ மாதிரி யிருக்கும். ஏனெனில், நான் அவளை என் தங்கையாகப் பாவிக்கத் தயாராக இல்லை. அதற்குப் பதிலாக, நான் அவளை என் விஷமக் கண்களால், ஆசை இதயத்தால் பார்ப்பேன்!

ஒரு நாள் பூவாயியிடம் என் இலக்கிய மேதையைக் காட்டும் பொருட்டு, "பூவாயி, ஒரு மலரை மலர்விக்கச் சூரியனின் கிரணங்கள் அவசியமல்லவா? அந்தமாதிரியே ஒரு பெண்ணின் இருதயம் பூரண மலர்ச்சியுடன் பொலிவுற்றுத் திகழ வேண்டுமானால் அதற்கு ஒரு ஆதரவு வேண்டாமா?" என்றேன்.


அவள் தன் கண்களை அகல விழித்து, "என்ன அண்ணா! நீ சொல்லுவது எனக்கு ஒன்றும் தெரியலையே!" என்று சொல்லிக் கொண்டே ஓடி விட்டாள்.

'ஏழைக்கு அழகும், நோயாளிக்கு செய்யும் விஷமும்' என்று சொல்லுவது எவ்வளவு வாஸ்தவம்!

என் இதயம் பூவாயியைப் பார்ப்பதில் பூரிப்படைந்திருந்தாலும், 'கௌரவமாகக் குடும்பத்தை நடத்துவதற்குப் பணம் வேண்டுமே' என்ற கவலையிலும் ஆழ்ந்திருந்தது.

★

அன்று நான் கடற்கரைக்குச் சென்றிருந்தேன். "பணமே! உன்னால் என்ன குணமே" என்று வானொலியில் யாரோ



"என்னப்பா, இந்தச் சீப்பு என்ன விலே?"

"நாலணா, அம்மா!"

"இதுக்கா நாலணா? நீயே வைத்துக்கொள்! எனக்கு வேண்டாம்!"



ஒருவர் அட்டகாசமாகப் பாடிக் கொண்டிருந்தார். அவர் பாடுவதும் அந்தப் பணத்திற்காகத்தானே? விளக்கைச் சுற்றி வட்டமிடும் விட்டில் பூச்சியைப்போல, என் மனதில் "பணத்திற்கு என்ன செய்வது?" என்ற கேள்வி வட்டமிட லாயிற்று.

பரீட்சையில் விழிக்கும் பையனைப் போல் மேற்படி கேள்விக்குப் பதில் ஒன்றும் தோன்றாமல் மணலைக் கிளறிக் கொண்டேயிருந்தேன். மணலைக் கிளறக் கிளற உள்ளேயிருந்து பலவிதமான கிளிஞ்சல்கள், சிப்பிகள் வெளியே வந்தன. வளைந்தவை வட்டமானவை, நீண்டவை, அகலமானவை இன்னும் எத்தனையோ விதக் கோணல்கள் அவைகளில் அழகான சிலவற்றைப் பொறுக்கிச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு சூன்ய மனதுடன் வீடு வந்து சேர்ந்தேன். பூவாயி சமைத்து வைத்திருந்தாள்.

என் தாயார், "ஏண்டாப்பா! இவ்வளவு நேரம் கழித்து வந்தால் உடம்பு என்னத்திற்கு ஆகும்? இந்த வயதில் உனக்குப் பெருங் கவலையைக் கொடுத்து விட்டு உன் அப்பா சிங்கப்பூரில் சிக்கிக் கொண்டு விட்டார். எல்லாம் இந்தப் பாழாய்ப் போன யுத்தத்தால் வந்தது!" என்றெல்லாம் யுத்தத்திற்குச் சாம கவி பாடினாள்.

சாப்பிட்டு விட்டு நான் மாடியில் போய்ப் படுத்தேன். வழக்கப்படி பூவாயி மாடிக்குப் பால் கொண்டு வந்து கொடுத்தாள்.

"பூவாயி, உனக்காகச் சில சாமான்கள் கொண்டு வந்திருக்கிறேன், இங்கே வா!" என்றேன்.

அவள் "எனக்கா!" என்று நெஞ்சில் கையை வைத்துக் கொண்டே என் அருகில் வந்தாள்.

அவளுடைய கையில் நான் பொறுக்கி வந்த கிளிஞ்சல்—சிப்பிகளை வைத்து மூடினேன். அவள் 'கலீர்' என்று சிரித்துக் கொண்டே சிட்டாகப் பறந்து விட்டாள். அந்தக் கையின் ஸ்பரிசத்தை நினைத்து நினைத்து இன்புறுவதற்காக, நான் அன்று இரவு முழுவதும் நித்திராதேவியுடன் 'டூ' விட்டு விட்டேன்.

எதிர் வீட்டிலிருந்த ரேடியோ 'மாலைப் பொழுதினிலே' என்று பாட ஆரம்பித்து விட்டது. அந்த நாத வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தேன்.

"அண்ணா!" என்று கூப்பிட்டுக் கொண்டே பூவாயி ஓடிவந்தாள்.

"என்ன பூவாயி!" என்றேன்.

"என் காதைப் பார்த்தீர்களா?" என்று சொல்லிக் கொண்டே அருகில் வந்தாள்.

அவனுடைய காதில் குண்டலம் தொங்கிக் கொண்டிருந்தது. நான் அதற்கு முதல் நாள் இரவு கொண்டுவந்த கிளிஞ்சல் சிப்பிகளில் ஒரு ஜோடியை எடுத்து நன்றாகத் தேய்த்து அதில் துவாரம் போட்டுக் கயிற்றைக் கட்டிக் காதில் மாட்டிக் கொண்டிருந்தான். அப்படி யிப்படி அசையாமல் அவன் என் அதிசயப் பார்வையைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று தேள் கொட்டினால் மனிதன் எப்படித் தன் காலை உதறிக் கொண்டு குதிப்பானோ, அப்படியே நானும் திடீரென்று "பூவாயி!" என்று சொல்லிக் குதித்தேன். அவன் மிரண்டு போனான்.

'விறு விறு' என்று என் மூளை வேலை செய்ய ஆரம்பித்தது.

என் முகத்தையும், மௌனத்தையும் பார்த்துப் பயந்த பூவாயி, "என்ன, அண்ணா! உடம்பு சரியில்லையா?" என்று கேட்டான்.

"பூவாயி, நீ தெய்வம்தான்!" என்றேன். எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ என்று நினைப்பது போல அவன் என்னைப் பார்த்தான்.

"பூவாயி, நிஜமாச் சொல்றேன்; எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நீ காதிலே போட்டிருக்கிறாயே, அந்த மாதிரி எத்தனை ஆயிரம் கிளிஞ்சல் சிப்பி வேணுமானாலும் சமுத்திரக் கரையிலே கிடக்கும். அதை யெல்லாம் பொறுக்கி வந்து, நல்லாத் தேச்சு, குண்டலமாகச் செய்து விற்றால் என்ன? இது ஒரு நல்ல வியாபார மில்லையா?" என்றேன்.

அவன் ஆச்சரியத்தால் புருவத்தை உயர்த்தி இரத்தினக் குவியல் கிடைத்த ஏழை போல பேச வாயில்லாமல் கல்லாய்ச் சமைந்து விட்டான்.

இந்தச் சமயத்தில், "பூவாயி!" என்று என் தாயார் கூப்பிட்ட குரல், எங்கள் சிந்தனையைக் கலைத்தது. அவன் ஓடி போய் விட்டான்.



சந்திரா

என் மனம் திட்டம் போட ஆரம்பித்து விட்டது. புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள இரண்டு விதிகள் அவசியம். ஒன்று செயலில் இறங்கு முன் 'சிந்தனை.' மற்றது, செயலில் இறங்கிய பின் 'அடக்கம்'.

குண்டலம் செய்து விற்பது நல்ல வியாபாரம்தான். எதுதான் நல்ல வியாபாரமில்லை? செய்கிறவன் ஒழுங்காகச் செய்தால் எல்லாம் நன்றாக நடக்கும். இப்பொழுது குண்டலத்திற்கு நல்ல கிராக்கி. அதிலும் தினுசு தினுசாக, அழகாகச் செய்துவிட்டால்—விலையும் மலிவாக இருந்து விட்டால் — அப்புறம் கேட்பானேன்?" என்று எண்ண ஆரம்பித்தேன்.

சிந்தனை முடிந்து விட்டது. செயலில் இறங்க வேண்டியதுதானே?

மௌண்ட்ரோட்டில் ஒரு கடை கிடைப்பது பகீரதப் பிரயத்தனமாகப் போய் விட்டது. அறம், பொருள், இன்பம் வேண்டுமானாலும் கிடைக்கும்; வீடு கிடைப்பதுதான் கஷ்டம். ஆனாலும் சிபார்சினால் ஆகாத காரியம் உலகில் ஒன்றுமில்லை யல்லவா? எனக்கும் ஒரு நண்பரின் சிபார்சினால் இடம் கிடைத்து விட்டது.

ஒரு நல்ல நாள் பார்த்து குண்டலகேசி அண்டு கோ என்ற பெயருடன் கடையைத் திறந்தேன். கிளிஞ்சல் சிப்பிகளைப் பொறுக்கி வர நான்கு வேலையாட்களை நியமித்தேன். என் தாயாரிடம் அனைத்தையும் கூறி, அவள் சம்மதமும் பெற்றுக் கிளிஞ்சல் சிப்பிகளை அழகாகத் தேய்ப்பதற்காகப் பூவாயியையும் கூட்டிக் கொண்டேன்.

தேய்த்த கிளிஞ்சல்களில் புதுப் புது மாதிரியான வர்ணச் சித்திரம் தீட்ட இரு சித்திரக்காரர்களையும் நியமித்தேன்.

வேலை 'விறு விறு' வென்று நடக்க ஆரம்பித்தது. ஆயிரக் கணக்கான குண்டலங்கள் 'ஷோ ரூ'மிற்கு வந்து விட்டன.

எல்லாப் பத்திரிகைகளிலும் 'குண்டல ஜெனி அண்டுகோ' விளம்பரம் பூவாயியின் படத்துடன் தொடர்ச்சியாக வெளிவர ஆரம்பித்தது.

ஒரு ஜோடி குண்டலத்தின் விலை அணா எட்டுத்தான். "எவ்வளவு மலிவு!" என்று உலகத்தின் பல பாகங்களிலிருந்து 'ஆர்டர்கள்' வந்து மலை மலையாகக் குவிந்தன.

சில தினங்களுக்குப் பிறகு பூவாயி கடைக்குப் போவதை நானே தடுத்து விட்டேன். அவளால்தானே இவ்வளவும்!



ஆனால் அவள் மட்டும் எப்பொழுதும் எனக்குப் பணிப் பெண்ணாகவே இருந்தாள்!

பணம் பெருகியதால் என் தாயார் எனக்குக் கல்யாணம் செய்ய வேண்டுமென்று துடித்தாள். நான், "அப்பா வரட்டும், பார்த்துக் கொள்ளலாம்" என்று தட்டிக் கழித்து வந்தேன்.

அன்றிரவு பூவாயி எனக்கு வழக்கம்போல் சாதம் பரிமாறினாள். என் தாயாரும் அவள் தாயாரும் ஹாலில் ஏதோ முணு முணுத்துக் கொண்டிருந்தார்கள். நான் சாப்பிடாமல் பூவாயியையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"என்ன, அண்ணா! என்னை விழுங்கி விடற மாதிரி பார்க்கிறயே!" என்று கூறிச் சிரித்தாள்.

"ஆமாம், பூவாயி! உன்னை விழுங்கி விட வேண்டு மென்றுதான் பார்க்கிறேன்!"

"சோத்தை விழுங்கினாலும் பிரயோஜனம் உண்டு; என்னை விழுங்கினா என்ன பிரயோஜனம்?"

இத்தனை நாளும் சோற்றை விழுங்கி விழுங்கி என்ன சுகத்தைக் கண்டேன்? ஊன்தான் பெருத்தது; உள்ளம் பெருக்கவில்லை......"

"பின்னே என்னை விழுங்குவது தானே அண்ணா?" என்று அவள் அருகில் வந்து உட்கார்ந்தாள். என்னுடைய ஆசை வெள்ளம் கரை புரண்டது.

அருகிலிருந்த அவளைச் சாதம் பிசைந்து கொண்டிருந்த கையுடன் அணைக்கச் சென்றேன். அவள், "ஐயோ! அண்ணா! இதென்ன?" என்று விலகி நின்றாள்.

நான் அருகில் சென்று, "கோபமா?" என்று கேட்டேன். அவள் கண்ணீர் விட்டுக் கொண்டே "அண்ணா! என்னை வளர்த்த நீங்க எனக்குப் புருசனைவிட அண்ணாவாகவே இருந்தால் அவ்வளவு நல்லாயிருக்கும்?" என்றாள். இந்தச் சமயத்தில் எங்களுக்குப் பின்னால் யாரோ வரும் சத்தம் கேட்டது. இருவரும் பிரிந்து விட்டோம்.

இரவு முழுவதும் எனக்குத் தூக்கமில்லை. மறுநாள் வழக்கம்போல் "அண்ணா!" என்று கூப்பிட்டுக் கொண்டே மாடிக்கு வரும் பூவாயி அன்று வரவில்லை. நான் அவள் குடிசைக்குச் சென்றேன். அவளுக்கு நல்ல ஜுரம் அடித்துக் கொண்டிருந்தது.

"பூவாயி!" அவள் என்னைத் திரும்பிப் பார்த்தாள்.

"உடம்பை என்ன செய்கிறது, பூவாயி?"

"ஏதோ தெரியலே, அண்ணா!" என்று அவள் நடுங்கிக் கொண்டே பதில் சொன்னாள்.

அதற்குமேல் நான் அவளை ஒன்றும் கேட்கவில்லை. பரபரப்புடன் சென்று டாக்டரை அழைத்து வந்தேன்.

"ஏதோ மன அதிர்ச்சியால் உண்டான கோளாறு!" என்று சொல்லி டாக்டர் மருந்து கொடுத்தார்.

அன்று முழுவதும் நான் பூவாயிக்குத் தேறுதல் சொல்லிக்கொண்டிருந்தேன்.

இரண்டு, மூன்று நாட்களுக்குப் பிறகு, "இப்பொழுது எப்படி இருக்கிறது, பூவாயி?" என்று நான் அவளை விசாரித்தேன்.

"நான் சாகப் போகிறேன், அண்ணா!" என்றாள் அவள்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. "பேசாமலிரு, பூவாயி!" என்றேன்.

"நான் பிழைத்து விட்டால் என்னை நீங்கள் கலியாணம் செய்து கொண்டு விடுவீர்கள் அல்லவா? அதனால்தான் செத்துப் போகலாம்னு பார்க்கிறேன்.

நானோ ஏழை; கீழ் ஜாதி என்னைக் கல்யாணம் செய்து கொண்டால் உங்களுக்கு எப்பவும் கஷ்டம்தான். அதைவிட நீங்க எப்போதும் என் அண்ணாவாகவே இருப்பதுதான் நல்லது. இன்னும் கொஞ்ச நாளைக்கு நான் ஜீவித்திருக்கணும்னு நீங்க எனக்கு அண்ணாவாயிருந்தாத்தான் முடியும்?" என்று சொல்லி அவள் கண்ணீர் பெருக்கினாள்.

என் மனம் இளகி விட்டது. "அதற்கென்ன, பூவாயி! நான் உனக்கு அண்ணாவாகவே இருக்கிறேன்!" என்றேன்.

★

நான் தங்கையாகப் பாவிக்க ஆரம்பித்தவுடன் அவள் உடல் நிலை தேற ஆரம்பித்து விட்டது.

இந்நிலையில் அவள் என் கல்யாணத்தைப் பற்றி விசேஷ சிரத்தை எடுத்துக் கொண்டாள். நீ அப்பொழுது சாரதா வித்தியாசாலையில் படித்துக் கொண்டிருந்தாய். எங்கள் வீட்டின் வழியாகத்தானே நீ பள்ளிக்கூடத்திற்குப் போவது வழக்கம்? அப்பொழுதெல்லாம் பூவாயி உன்னைக் கவனித்திருக்கிறாள். அவள் மனதிற்கு நீ பிடித்து விட்டாய். உடனே உன்னைக் கலியாணம் செய்து கொள்ளும்படி என்னை வற்புறுத்த ஆரம்பித்து விட்டாள். உன்னுடைய அருமை பெருமைகளை அவள் என்னிடம் அடிக்கடி எடுத்துச் சொல்லுவாள். ஒருநாள் நீ பள்ளிக்கூடம் போகும் போது பூவாயி ஓடோடியும் வந்து என்னைக் கூப்பிட்டு உன்னைப் பார்க்கும்படிச் சொன்னாள். நானும் பார்த்தேன். எனக்கு உன்னைப் பிடித்திருப்பதாக அவளிடம் சொன்னேன்.

கலியாணம் நிச்சயமாகிவிட்டது. பலஹீனமான உடல் நிலையுடன் பூவாயி ஓடி ஆடித் திரிந்தாள்.

மறு நாள் விடிந்தால் முகூர்த்தம். முதல் நாள் இரவு திடீரென்று பூவாயிக்கு மயக்கம் வந்தது. அவளை வற்புறுத்திப் படுக்க வைப்பதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. என் தாயாரையும் அவள் தாயாரையும் பூவாயிக்கு துணையாகப் படுக்கச் சொல்லிவிட்டு நான் மாடிக்குப் படுக்கப் போனேன்.

"அண்ணா!" என்ற பூவாயியின் அலறல் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தேன்.

எங்கும் இருட்டு; ஒன்றும் தெரியவில்லை. என் மாடி அறையை ஒட்டினாற்போல் படிகள் இருந்தன. நான் ஓடிவந்த வேகத்தில் பூவாயியைக் கவனிக்கவில்லை. அவள் மீது மோதிக்கொண்டு விட்டேன். அவ்வளவுதான்; அவள் அடுத்த கணம் மாடிப் படியில் உருண்டு சென்று கொண்டிருந்தாள்! வீட்டிலிருந்தவர்கள் எல்லோரும் 'திருடன்தான் வந்து விட்டானாக்கும்' என்று நினைத்துக் கூக்குரல் போட்டனர். எனக்கு ஒன்றும் புரியவில்லை. வேலைக்காரர்கள் மின்சார விளக்குகளைத் தட்டி விட்டனர்.

பூவாயி இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தாள்.

டாக்டருக்கு ஆள் ஓடிற்று. அவரும் வந்தார்.

"என்ன, டாக்டர்! விடிந்தால் கலியாணம். எப்படி இருக்கிறது, நிலைமை?" என்று நான் தழ தழத்த குரலுடன் கேட்டேன்.

"எல்லாம் சௌகரியமாகப் போய்விடும், ஸார்! ஆனால் கொஞ்ச நாளாகும்!" என்றார் அவர்.

கெட்டிக்கார டாக்டர்களே இப்படித்தான். நோயாளியையும் சாகவிடமாட்டார்கள்; நோயையும் சாகவிடமாட்டார்கள்!

பின்னர், டாக்டர் சொல்லியபடி பூவாயியை வேறு வீட்டிற்குத் தூக்கிக் கொண்டு போய்ப் படுக்க வைத்தோம்.

விடிந்தது. சூரியனின் உதயம் என் நிலைமையைக் கண்டு பரிகசிப்பது போலிருந்தது! கடைசியில் என்ன? கொட்டு மேளத்துடன் எனக்கும் உனக்கும் திருமணம் நடந்தேறியது.

மாலையில் பூவாயிக்கு 'அதிக'மாக இருப்பதாகச் சொன்னார்கள். அவள் இருந்த இடத்திற்கு நான் மணக் கோலத்துடன் ஓடினேன். அவளுடைய கடைசி மூச்சு என்னிடம் விடை பெற்றுக் கொண்டது.

இதுதான் பூவாயியின் கதை. இதை நீ அறியாமல் இருந்தால் நலமென்று இத்தனை நாளும் கருதினேன். ஆனால், பந்தை என்னதான் தண்ணீரில் அமுக்கினாலும் அது எப்படியும் மேலே மேலே வந்துதான் ஆக வேண்டுமல்லவா? அதைப் போல இந்தச் சம்பவமும் உனக்கு ஒரு நாள் தெரிய வேண்டியதுதானே!

கடிதம் அனுமார் வால்போல் ரொம்ப ரொம்ப நீண்டு விட்டது. இதோ, அதைச் சுருட்டிக் கொண்டு விடுகிறேன்!

முத்துமாலை



[ஸரோஜா ராமமூர்த்தி]

ஜிலு ஜிலு வென்று காற்றடிக்கும் வெளி வராந்தாவில் கண்ணை மூடி அரைத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தான் ரகு. விடியற் காலம் மங்கின நிலவொளி அவன் படுத்திருந்த வராந்தாவுக்கு அடுத்த அறையின் ஜன்னல் வழியாக விழுந்து அங்கு போட்டிருந்த கட்டில்மேல் யாரும் இல்லை என்று அறிவித்தது. ஒரு தரம் கண்ணைத் திறந்து மனதில் ஏற்பட்ட பிரமையை நினைத்துச் சிரித்துக் கொண்டான் ரகு. லேசான மஞ்சள் கலந்த வெண்மை நிறம் கொண்ட முத்துமாலை ஒன்றை அணிந்துகொண்டு விஜயம்—இறந்துபோன அவன் மனைவி எதிரில் வந்து நிற்பதுபோல் இருந்தது. முத்துக்களின் நிறம் அவன் வெண்மையான கழுத்தில் படிந்து அதற்கு ஒரு சோபையைக் கொடுத்தது. விஜயம் இறந்து இரண்டு தினங்கள் தான் ஆகியிருந்தன. கீழே அவன் தாயாரும் மூன்று வயதுப் பெண்ணும் படுத்திருந்தார்கள். மூன்று தினங்களுக்கு முன்பு கொடிக் கொருதரம் 'லொக் லொக்' கென்று இருமி அவனுக்கு வேதனை அளித்து வந்த விஜயம் இன்று இல்லை. ரகு ஜேபியிலிருந்து விஜயத்தின் முத்து மாலையை எடுத்தான். அதை ஜேபியிலேயே வைத்திருப்பதால் அவன் மனதுக்கு ஒரு சாந்தி ஏற்பட்டு வந்தது. கண்களிலிருந்து இரண்டு துளிக் கண்ணீர் முத்து மாலையின் மேல் விழுந்து கீழே தெறித்தது. ரகு பழைய நினைவுகளில் ஈடுபட்டான்.

* * *

ரகு பணக்காரக் குடும்பத்தில் பிறந்த போதிலும் ஒரு சீர்திருத்தவாதி. பால்ய விவாகம், வரதக்ஷிணைக் கொடுமை முதலியவற்றைப் பலமாக எதிர்ப்பவன். கலாசாலை நண்பர்களிடம் தான் ஒரு ஏழைப் பெண்ணை மணந்து எல்லோருக்கும் பாடம் கற்பிக்கப் போவதாக அடிக்கடி கூறுவான். அவன் விருப்பத்தைப் போலவே அவன் வீட்டில் விஜயம் வளர்ந்து வந்தாள். திக்கற்ற விதவை மீனாக்ஷி, விஜயம் மூன்று வயதாக இருக்கும்போது ரகுராமன் வீட்டில் சமையல் வேலைக்கு அடைக்கலம் புகுந்தாள். ரகுவுக்கு அப்போது வயது பத்து. விஜயம், தன் வீட்டுச் சமையற்காரியின் பெண் என்பதையே அவன் மனம் நினைக்கவில்லை. விஜயம் வளர்ந்து பெரியவளான பிறகு ரகுவின் சகல வேலைகளையும் அவளே கவனித்து வந்தாள். அவன் அறையைப்

பெருக்குவது, புஸ்தகங்களை ஒழுங்காக வைப்பது, துணிகளை மடித்து வைப்பது எல்லாம் விஜயம்தான். ஆனால், முன் போல் அவள் ரகுவுடன் கலகலப்பாகப் பேசுவது இல்லை. அவன் ஏதாவது கேட்டாலும் தலையைக் குனிந்து கொண்டே பதில் சொல்லுவாள்.

ரகுவுக்குப் பல இடங்களிலிருந்தும் ஜாதகங்கள் வர ஆரம்பித்தன. போட்டியாக நான், நீ என்று பெண் கொடுக்க அநேக பணக்காரர்கள் வந்தார்கள். ரகுவின் தகப்பனார் பிள்ளைக்குப் பெண் தேடுவதில் முனைந்திருந்தார். இந்தச் சமயத்தில்தான் ரகு ஒரு தினம் திடீரென்று அவன் தாயாரிடம் கூறினான், விஜயத்தைத் தவிர வேறு யாரையும் தான் மணக்கப் போவதில்லை என்று. தாயார் திகைத்து நின்றாள்.

“என்னடா இது? அவளை அனாதையாக விட்டுவிடப் போகிறோமா, என்ன? அவளுக்கும் நல்ல இடமாகப் பார்த்து இந்த வருஷம் கல்யாணம் பண்ணிவிட்டால் போகிறது. அதற்கு நீதானா அகப்பட்டாய்?” என்று அவள் கேட்டாள்.

“இதில் என்ன பிசகு இருக்கிறது, அம்மா? விஜயம் என்ன அழகில்லாதவளா? பணம் ஒன்று இருந்து விட்டால் போதுமா?” என்று வாதித்தான் ரகு.

அப்பொழுது கூடத்தில் கண்ணாடிக்கு எதிரில் விஜயம் தலைவாரிப் பின்னிக் கொண்டிருந்தாள். பால் போன்ற உடல் நிறத்துக்கு ஏற்றபடி கறுப்புப் புடவை கட்டியிருந்தாள். கை நிறையப் பச்சைக் கண்ணாடி வளையல்கள். எடுப்பான மூக்கும், வளைந்த புருவமும், நீண்ட கண்களும் விஜயம் நல்ல அழகி என்று தெரிவித்தன. அவளுக்ஸ்திரீதனமாக வரக்கூடிய பொருள் ஒன்றும் இல்லை. வெகு காலமாக அவள் தாயார் அணிந்திருந்த முத்து மாலை ஒன்றுதான் அவளுக்கு ஆபரணம். அது ஒன்றே அவள் சங்கு போன்ற கழுத்துக்குப் போதுமானது. கறுப்பு நூலில் கோத்திருந்த அந்த முத்துக்களின் மஞ்சள் கலந்த நீலம் அவள் கழுத்துக்கு அழகை அளித்தது. ரகு அவளைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

“உனக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்கிறது, ரகு!” என்று அவன் தாயார் ராஜம் சற்றுக் கடினமாகவே கூறினாள்.

ரகு புன்னகை புரிந்தான். அம்மாவுக்கு என்ன பதில் சொல்வது என்று அவனுக்குப் புரியவில்லை.

“நம் விஜயத்துக்கு வெளியே வரன் ஒன்றும் பார்க்கப் போகிறதில்லை. அவளை நானே கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன், அம்மா!” என்றான் ரகுராமன்.

அதைக் கேட்டு விட்டுத்தான் ராஜம் அவனுக்குப் பைத்தியம் பிடித்திருப்பதாகக் கூறினாள். ரகுவின் தீர்மானம் ஸ்திரமானது என்பதை அவள் உணர்ந்தபோது அதனால் ரகுவின் தகப்பனாருக்கு ஏற்படப் போகும் கோபத்தை நினைந்து வருந்தினாள்.

பெரிய இடங்களிலிருந்து வந்த பெண்களையெல்லாம் உதறி விட்டு ரகு விஜயத்தை மணக்கப் போவதாகத் தகப்பனாரிடம் அறிவித்தான்.

தகப்பனாருக்கும், பிள்ளைக்கும் பலத்த மனஸ்தாபத்திடையே விஜயம் ரகுவின் வாழ்க்கைத் துணைவியானாள்.



2

வாழ்க்கையில் மனிதன் வகுத்த திட்டப்படி அநேகமாக ஒன்றும் நிறைவேறுவதில்லை. தகப்பனாரிடம் விரோதித்துக் கொண்ட ரகுவின் எதிர் காலம் அவ்வளவு பிரகாசமாக இல்லை. சீர்திருத்த வாதியான ரகுவின் மனதில் கிலேசம் குடி கொண்டது. விஜயம் தன்னுடன் ஸ்திரீதனமாகக் கொண்டு வந்திருந்தது அவள் முத்துமாலை ஒன்றுதான். விவாகமான ஒரு வருஷகாலத்துக்குள் மீனாக்ஷி இறந்து விட்டாள். பரம்பரையாக இருந்த அந்த

முத்து மாலையை அவன் ஒன்றும் செய்யக் கூடாது என்று விஜயத்திடம் அவள் தாயார் கூறி யிருந்தாள். ரகு ஒரு கம்பெனியில் குமாஸ்தா வேலையில் அமர்ந்தான். மாதம் ஐம்பது ரூபாய் சம்பளம். ஆரம்பத்தில் இல் வாழ்க்கை இன்பமாகத்தான் இருந்தது. கல்யாணமான ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு தினம் இரவு சாப்பாடு முடிந்ததும் விஜயம் தன் புருஷன் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள். வஸந்த காலம். தெருவில் மூலை முடுக்குகளிலிருந்து நாதஸ்வரத்தின் இனிமையான நாதம் காற்றில் தவழ்ந்து வந்தது. தாம்பூலம் தரித்த சிவந்த உதடுகளைக் கோணலாக மடித்து, "என்ன? யோசனை பலமாக இருக்கிறதே!" என்று கேட்டாள் விஜயம்.

"யோசனைதான், விஜயம்! நீ மூன்று மாதக் கர்ப்பிணி. உனக்குத் தாயாரும் இல்லை. என் தாயார் அனுப்பிய நூறு ரூபாயையும் அப்பாவின் மேலுள்ள கோபத்தால் திருப்பி அனுப்பிவிட்டேன். உனக்கு எவ்வளவோ செய்ய வேண்டும் என்று ஆசையாக இருக் கிறது. ஒன்றும் செய்யாவிட்டாலும் நீ கழுத்தில் போட்டிருக்கிறாயே முத்து மாலை, அதையாவது தங்கத்தில் கட்டிப் போட்டுப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது!"

"அதிர்ஷ்டம் இருந்தால் கிடைக்கிறது. அதற்காக யோசனை செய்து ஏன் மனதைக் கெடுத்துக் கொள்கிறீர்கள்?"

"மனதைக் கெடுத்துக் கொள்ள வில்லையே? ஆசைதானே படுகிறேன்!"

விஜயம் சிரித்துக் கொண்டே கணவன் முகத்தைப் பார்த்தாள்.

3

விஜயம் ஒரு பெண் குழந்தைக்குத் தாயானாள். யுத்தக் கொடுமையால் சாதா ரண வருவாயினுள்ள குடும்பத்தினர் அதிக மாகப் பாதிக்கப்பட்டார்கள். அம்மாதிரி குடும்பங்களில் ரகுராமனின் குடும்பமும் ஒன்று.

ஐம்பது ரூபாய் சம்பாத்தியத்தில் விலைவாசி களைச் சமாளிக்க முடியாமல் ரகு கஷ்டப் பட்டான். இந்த நிலையில் விஜயத்தின் மனம் மாறுதல் அடைய ஆரம்பித்தது. கணவன் கை நிறையச் சம்பாதிக்கவில்லையே என்கிற குறை அவள் மனதை உறுத்திற்று. ஒவ்வொரு நாளும் புதுப் புது நகைகள் மீதும், ஆடைகள் மீதும் ஆசை கொண் டாள். கழுத்தில் நூலில் கோத்த முத்து மாலையைப் பார்க்கும்போதெல்லாம் கண வன் வியாகமான புதிதில் கூறிய மொழிகள் அவள் நினைவுக்கு வந்தன. ரகுராமன் அவற்றை அடியோடு மறந்து விட்டான். விஜயம் அவனிடமிருந்து திரும்ப வும் அந்த வார்த்தைகளைக் கேட்க வேண்டு மென்று ஆசைப்பட்டாள். நிலவு பொழியும் இரவு ஒன்றில் பளமையான தங்கச் சரடில் கோத்த முத்து மாலையை அவள் கழுத்தில் ரகு அணிவிப்பதாகக் கற்பனை செய்து கொண்டாள். கனவும் கண்டாள்.

ஆனால், ரகுவின் கவலை நிறைந்த மொழி களைத் தவிர வேறொன்றும் அவனிடம் எதிர் பார்க்க முடியவில்லை. விஜயத்தின் ஆத்திரம் பொங்கிக் கொண்டிருந்தது. அன்று எப்படியாவது தைரியத்தை வர வழைத்துக் கொண்டு கேட்டுவிடுவது என்று நிர்மானித்துக் கொண்டாள். வழக்கம் போல் மாலை ஆறு மணிக்கு வரும் ரகு அன்று மணி எட்டாகியும் வரவில்லை. விஜயத்தின் ஆத்திரம் எல்லைமீறிப் போயிற்று. இரவு மணி ஒன்பதரைக்கு ரகு வீடு வந்து சேர்ந்தான். தெருக் கதவைத் திறந்துவிட்டு உள்ளே போய்ப் படுத்துக் கொண்டாள் விஜயம்.

"சாதம் போட வருகிறாயா?"

விஜயம் தடதட வென்று எழுந்து இலையைப் போட்டுப் பரிமாறினாள். மார்கழி மாதத்துச் சிறு சிறுப்பில் 'ஐஸ்' போலச் சில்லிட்டிருந்தது சாதம். சாதத்தைப் பிசைவதில் ஈடுபட்டிருந்தான் ரகு.

"மோர்தான் வைத்திருக்கிறேன்" என் றாள். விஜயம்.

"ஏன் வேறே ஒன்றும் இல்லையா?" என்று கேட்டான் ரகு.

"இல்லை"

"ஏனாம்?"

"........."

"இந்த மாதத்தில் இப்படி மோருஞ் சாதம் சாப்பிட்டால் உடம்புக்கு ஏதாவது வந்தால் என்ன பண்ணுவதாம்? நீயும், குழந்தையும் இதைத்தானா சாப்பிட்டீர்கள்?"

"ஆமாம், மார்கழி மாசத்துப் பனியில் இரவு பத்து மணி வரைக்கும் ஊர் சுற்றி விட்டு வந்தால் மட்டும் உடம்புக்கு ஆகுமா?"

ரகு அவளை நிமிர்ந்து பார்த்தான். அந்த முகத்தில் இருந்த கோபமும் தாக்கமும் அவனால் சகிக்க முடிய வில்லை.

"ஊர் சுற்றுகிறேனா?"

"இல்லை, சினிமாவுக்குப் போயிருப்பீர்கள்."

"எனக்குச் சினிமா ஒன்றுதான் குறைச்சல்! நாலு பேரைப் போல் சந்தோஷமாக இருக்கத்தானே நான் பிறந்திருக்கிறேன்?"

"நானும், குழந்தையும் எங்காவது தொலைந்து போகிறோம், சந்தோஷமாக வேறு பணக்காரப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு இருங்களேன். உங்கள் அப்பாவும் அதற்காகத்தானே காலணா ஒத்தாசை செய்யாமல் இருக்கிறார்?"

"போதும், வாயை மூடிக்கொள். இலையில் சாதத்தைப் போட்டு விட்டு......"

"வரவர உங்களுக்கு என் மேல் பிரியமே இல்லை. பிரமாதமாகச் செய்து விடப்போவதாக ஜம்பம் அடித்துக் கொண்டீர்களே?"

"ஆமாம், ஜம்பம் அடித்துக்கொண்டேன்; செய்ய முடியவில்லை."

"பத்துச் சிநேகிதர்களோடு சேர்ந்து கொண்டு ஊர் சுற்ற மட்டும் முடிகிறதா?"

"வாயை மூடு, விஜயம்!" என்று இரைந்தான் ரகு.

"மூடிக்கொள்கிறேன். முத்து மாலை செய்து போட்டுக் கழுத்தில் பளபள வென்று மின்னுகிறதோ, இல்லையோ?"

"என்னால் முடியாது, விஜயம்! அவ்வளவு தான். நீயும் உன் முத்து மாலையும்......"

விஜயம் சரசர வென்று உள்ளே சென்றாள். முத்து மாலையைக் கழற்றிப் பெட்டியில் வைத்தாள். அது கழுத்தில் இருப்பதால்தானே கணவனுடன் சண்டை போடும்படி ஆசையைத் தூண்டுகிறது? சனியன்! கண் மறைவாகக் கிடக்கட்டும்!

அதற்குப் பிறகு விஜயத்தின் மனதில் ஆழ்ந்த விவேகம் குடி கொண்டது. ரகுவை மணப்பதால் உலகில் மற்றப் பணக்காரப் பெண்களுடன் சரிசமமாக உலாவலாம் என்று அவள் கண்ட கனவு தேய்ந்து போயிற்று. ரகுவும் விஜயத்தை மணப்பதால் சீர்திருத்தவாதிகளில் முதன்மை ஸ்தானம் வகிக்கலாம் என்று எண்ணியதும் வீணாயிற்று. இருவருடைய ஒன்றுபட்ட மனங்களுக்குமிடையே திரை ஒன்று விழுந்தது. ரகு விஜயத்துடன் அதிகம் பேசவில்லை. விஜயமும் ரகுவுடன் பேசவில்லை. மனதில் ஏற்பட்ட வருத்தத்தைத் தாங்கச் சக்தியில்லாமல் விஜயம் நோய்வாய்ப்பட்டாள். ரகுவின் கண்களுக்குத் திடீரென்று ஒரு தினம் விஜயத்தின் மெலிந்த உடலும், குழி விழுந்த கண்களும் தெரிந்தன. "விஜயம்! நீ ஏன் இளைத்துப் போகிறாய்? உன் உடம்புக்கு என்ன?"

"உடம்பு சரியாகத்தான் இல்லை."

"டாக்டரிடம் காட்டலாமா?"

"வேண்டாம், பார்த்துக் கொள்ளலாம்" என்றாள் விஜயம்.

நாளுக்குநாள் விஜயத்தின் உடம்பு இளைத்துத் துரும்பாகி விட்டது. படுத்த படுக்கையாகப் படுத்து விட்டாள். விஜயம் வியாதிக்காரியாக மாறிய பிறகு தன் தவறை உணர்ந்தான்.

"டாக்டர் செலவுக்குப் பணத்துக்கு என்ன பண்ணுகிறீர்கள்? என் முத்துமாலையையாவது விற்றுச் செலவுக்கு வைத்துக் கொள்ளுங்களேன்!" என்றாள்.

"கூடாது விஜயம், உனக்கு உடம்பு தேறிய பிறகு அதைத் தங்கத்தில் கட்டிப் போட்டுப் பார்க்கப் போகிறேனே."

விஜயம் லேசாகச் சிரித்துக் கொண்டாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

விஜயம் பேசவில்லை. ரகு அவள் முகத்தை வருடினான். உதடுகள் நீலமாக ஜில்லிட்டிருந்தன.

"விஜயம், விஜயம்!"

லேசான புன் சிரிப்புடன் கணவனின் ஆசையை அறிந்து கொண்டதும் இந்த உலகத்தை விட்டு விடுதலை அடைந்து விட்டாள் விஜயம்.

• • •

"அப்பா! தூங்கறயா?" என்று மூன்று வயதுக் குழந்தை அவனை எழுப்பினாள். கண்ணை மூடிப் பழைய நினைவுகளில் ஆழ்ந்திருந்த ரகு கண் விழித்துப் பார்த்தான். எதிரில் அவனுடைய மூன்று வயதுப் பெண் நின்றுகொண்டிருந்தாள்.

"காப்பி சாப்பிட்டாயா, அம்மா? இங்கே என் அருகில் வா!" என்று குழந்தையைக் கூப்பிட்டு அணைத்துக் கொண்டான்.

விஜயத்தைப் போலவே நீண்ட கண்களும் களை நிறைந்த முகமும் அவனுக்கு விஜயத்தின் உருவத்தை நினைவுபடுத்தின. கையில் இருந்த முத்து மாலையைக் குழந்தையின் கழுத்தில் போட்டுவிட்டுக் கண்ணீர் உகுத்தான் ரகு. குழந்தை மிகவும் பரிதாபமாக அவன் முகத்தைப் பார்த்தாள்.

என் தாண்டவம்!

சுந்தரா

அன்று மகாருத்ரன் தாண்டவம் ஆடினான். இன்று, நான் புறப்பட்டிருக்கிறேன் தாண்டவமாட! போரொலி ஓய்ந்தவுடனே, சாந்தி தேவி நடனமாடுவாள் என்று எல்லோரும் எதிர் பார்த்தார்கள்; ஆவலுடன் எதிர் பார்த்தார்கள்.

ஆனால், அவள் ஆட வரவில்லை.

அவள் மீது குற்றமில்லை. அவள் ஆயத்தமாகவேதான் இருந்தாள். மங்களத் துகில் அணிந்து, வெண்ணிற மலர் சூடி, மஞ்சள் திலகமிட்டு, நீல மாளிகையில் ஊஞ்சல் ஆடிக் கொண்டிருந்தாள். "எப்போது வேளை வரும்?" என்று அவள் மனதில், ஆசையும் ஊசலாடிக் கொண்டிருந்தது.

போரொலி ஓய்ந்தது. சதங்கை குலுங்கக் குதித்தோடி வந்தாள். கபாடம் திறந்து வெளி வாசல் வந்தாள்.

ஆனால், ஆனால், சகுனங்கள் தடை செய்தன. ஒன்றின்பின் ஒன்றாகப் பல துர்ச் சகுனங்கள்.

தேவி அச்சமுற்றாள்; வேதனையுற்றாள்; துவண்டு தள்ளாடி மாளிகைக்குள் மறைந்தாள்.

★

இப்போது, நான்தான் தாண்டவம் ஆடவேண்டும். இதோ புறப்பட்டுவிட்டேன். எனக்கு எல்லாம் நற்சகுனங்களே!

சாக்குருவி கூவுகிறது. தலைவிரித்தொரு உருவம் வருகிறது. நாயொன்று ஊளை விடுகிறது.

இதோ புறப்பட்டு விட்டேன். கறுத்த ஆடையும் செந்நிற மாலையும் அணிந்து புறப்பட்டு விட்டேன். பறையும் பம்பையும் உறுமி ஒலிக்கப் புறப்பட்டு விட்டேன்.

ருத்ர தாண்டவம்! அது நடந்த பிறகேதான் கலைஞர்கள் விமர்சனம் செய்தார்கள். ஆனால், என் தாண்டவம் பற்றியோ, முன் கூட்டியே எங்கெங்கும் விளம்பரம் செய்கிறார்கள். மன்னர்களும், மந்திரிகளும், பிரமுகர்களும். பெரிய பெரிய பிரகடனங்கள் பிரசுரிக்கிறார்கள். "இதைப் போன்ற பஞ்சத் தாண்டவத்தை இதற்கு முன் கண்டதில்லை!" என்று பிரசங்கிகளெல்லாரும் சொல்மாரி பொழிகிறார்கள். இவ்வாறு, உலகில் ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு வீட்டிலும், என் கலைத்திறன் பற்றிப் பேசுகிறார்கள்.

என் தாண்டவத்துக்கு முன்னுரை அறிவிக்க, விசேஷ தூதர்கள், திக்குக்குத் திக்கு, திசைக்குத் திசை விரைந்து செல்கிறார்கள். வாகனமேறியும், கப்பலேறியும், விமானமேறியும் சென்று கட்டியம் கூறுகிறார்கள்!

★

இதற்கு முன்னாலும் நான் பலமுறை தாண்டவம் ஆடியிருக்கிறேன். ஆயினும் இவ்வளவு எடுப்பான தாண்டவம் ஆடியதில்லை; ஆடத் துணிந்ததுமில்லை. ஆசை தீருகிறவரை, ஆவேசம் தணிகிறவரை இப்போது களிக்கூத்து ஆடலாம்!


சிதைந்த நகரங்கள்; குலைந்த கிராமங்கள்; இடிந்த கட்டிடங்கள்; எரிந்த கூளங்கள்; உதிரமும் கண்ணீரும் ஓடி உறைந்த சமர்க்களங்கள்—இத்தனை அரங்குகளிலும், ஒரே சமயத்திலோ, மாறி மாறியோ, தாண்டவம் ஆடலாம்.

தட்டுத் தடாலென்று குதிகால்கள் மிதித்தாடுவேன்; வெறிகொண்ட வாட்கரங்கள் வீசி ஆடுவேன்; தீப்பொறிகள் சிதறிடச் சுழன்றாடுவேன்.

கண்ணிலே கனல் ஆடும்; மூச்சிலே விஷம் ஆடும்; சுற்றிலும் பசி ஆடும்!

கோடானுகோடி மக்கள் என் ஆவேசத் தாண்டவத்தைக் காண்பார்கள்.

அவர்களில் எத்தனை பேர் சொக்கி விழுவார்களோ? எத்தனை பேர் கிறங்கித் திடப்பார்களோ? எத்தனை பேர் மயங்கிச் சோர்வார்களோ? எத்தனை பேர் என்னெதிர் நின்றாடி, என்னுடன் மன்றாடி, என்னுளே மறைந்தாடுவார்களோ? யார் கண்டார்கள்?



பறக்கும் ஸைக்கிள்

ராஜி

கோபாலனின் தகப்பனர் பெரிய பணக்காரர். அவருக்குப் பெரிய தோட்டம் ஒன்று இருந்தது. அந்தத் தோட்டத்தில் கோபாலன் ஒரு கூடையை எடுத்துக் கொண்டு மாமரத்திலுள்ள மாம்பழங்களைப் பறித்துக் கொண்டிருந்தான். சுலபமாகக் கைக்கு எட்டிய பழங்களை அவன் பறித்தான். ஆனல் அவன் கைக்கு எட்டாத பழங்களைப் பறிக்காமல் விட்டுவிட அவனுக்கு மனம் வரவில்லை. எனவே அவற்றைப் பறிக்க என்ன செய்யலாம் என்று யோசனை செய்தான் கோபாலன்.

அச்சமயத்தில் ஒரு கிழவன் நீண்ட தாடியுடன் அங்கு வந்தான். அவனைப் பார்த்த கோபாலனுக்கு ஆச்சரியமும் பயமும் உண்டாயிற்று.

"கோபாலா, நீ என்னைக் கண்டு பயப்படாதே. நான் ஒரு மந்திரவாதி. நீ நல்ல பையன், ஆகையால் உனக்கு உதவி செய்யவே இங்கு வந்தேன். இதோ எட்டாத பழத்தை எல்லாம் உனக்கு எட்டும்படி செய்கிறேன்!" என்று கூறி மந்திரவாதி தன் கையிலிருந்த பாத்திரத்திலிருந்து சிவப்பு நிற ஜலத்தை எடுத்துக் கோபாலனின் இரு கால்களிலும் உள்ள செருப்புக்களின் அடியில் தடவினன்.

உடனே கோபாலன் அந்தச் செருப்புக்களை அணிந்து கொண்டான். அவ்வளவுதான். அவன் நிஜமாகவே உயரக் கிளம்பி விட்டான். மரத்தின் உச்சியிலுள்ள மாம்பழங்களை வேண்டிய மட்டும் பறித்தான். பிறகு, கீழே இறங்க வேண்டுமல்லவா? ஆனல் அவனல் அது தான் முடியவில்லை. இன்னும் மேலே மேலே போய்க்கொண்டிருந்தான். கோபாலனுக்குப் பயத்தினல் மூச்சு நின்றுவிடும்போலிருந்தது. கீழே எப்படி இறங்குவது என்றும் தெரியவில்லை. மந்திரவாதியை உரக்கக் கூப்பிட்டான். கோபாலன் வெகு உயரத்தில் இருந்ததினல் மந்திரவாதிக்கு அவன் கூப்பிட்டது கேட்கவில்லை.

கோபாலன் சற்று யோசித்தான். காலிலுள்ள செருப்புகளைக் கழற்றி எறிந்து விட்டால் கீழே இறங்கி விடலாம் என்று அவனுக்குத் தோன்றியது. அதுவும் சரியான யோசனை அல்லவா? கோபாலன் வலது காலிலுள்ள செருப்பைக்கழற்றிக் கீழே நழுவ விட்டான். என்ன ஆச்சரியம்! கொஞ்சம் கொஞ்சமாக அவனும் கீழே இறங்க ஆரம்பித்தான். பிறகு இடது கால் செருப்பையும் கழற்றி எறிந்தான். கிடு கிடு என்று கீழே இறங்கித் தன் வீட்டுத் தோட்டத்திலேயே திமுரென்று குதித்தான். கோபாலன் குதித்த சமயத்தில் மந்திரவாதி மரத்தடியில் சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் மந்திரத் தண்ணீர் உள்ள பாத்திரம் இருந்தது.


கோபாலன் தன் வீட்டிற்குள் சென்று மாம்பழங்களை உள்ளே வைத்தான். அப்பொழுது அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. உடனே தோட்டப் பக்கம் சென்று மெதுவாக மந்திரத் தண்ணீரை எடுத்துத் தன் ஸைக்கிளின் இரண்டு சக்கரங்களிலும் தடவினன். பிறகு மந்திரத் தண்ணீர் இருக்கும் பாத்திரத்தைக் கொண்டு போய் மந்திரவாதிக்குப் பக்கத்தில் மெதுவாக வைத்து விட்டுத் திரும்பினன்.

பாத்திரத்தை வைத்து விட்டுத் திரும்பி வந்து பார்க்கும்பொழுது அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவன் வைத்திருந்த இடத்தில் அவனுடைய விலை உயர்ந்த ஸைக்கிளைக் காணவில்லை. கோபாலன் 'ஓ'வென்று அலறினன். இங்கும் அங்கும் ஓடி அலைந்தான், என்ன பிரயோஜனம்! ஸைக்கிள் திருட்டுப் போய் விட்டது.

போலீஸ் ஸ்டேஷனுக்குச் சமாசாரம் எட்டிற்று. போலீஸ்காரர்கள் என்ன செய்வார்கள்? தினந்தோறும் சைக்கிள் திருட்டைப் பற்றி அவர்களுக்குப் புகார்கள் வந்து கொண்டிருந்தன. ஆனால் சைக்கிள் திருடன் மட்டும் அகப்படவில்லை.

அச்சமயத்தில் கோபாலன் எதையோ பார்த்துவிட்டுக் கைகொட்டிச் சிரித்தான். ஆகாயத்தில் அவன் சைக்கிளில் ஒருவன் ஏறிக்கொண்டு உயரக் கிளம்பிக் கொண்டிருந்தானால் யாருக்குத்தான் சிரிப்பு வராது? உடனே இதை வேடிக்கை பார்க்க ஜனங்கள் திரள் திரளாகக் கூடி விட்டார்கள். "திருடன் அகப்பட்டுக் கொண்டான்!" என்று போலீஸ்காரர்கள் கூச்சலிட்டார்கள். அச்சமயத்தில் புதிதாகப் பறக்கும் சைக்கிளைக் கண்ட பல காகங்கள் வெருண்டு பறக்கும் சைக்கிளின் டயர்களை மூக்கினால் குத்தவே டயரிலிருந்த காற்று வெளிப்பட்டு சைக்கிள் கீழே விழுந்தது. அத்துடன் சைக்கிள் திருடனும் கீழே விழுந்தான்.


சைக்கிள் திருடனைப் போலீஸ்காரர்கள் பிடித்துக் கொண்டார்கள். திருடனைப் பிடித்துக் கொடுத்த கோபாலனுக்கு நிறைய வெகுமதியும் தின்பண்டங்களும் கிடைத்தன!



பெரிய மனிதர்கள் டிரைவரை உள்ளே உட்கார வைத்துவிட்டு



தாமே காரை ஓட்டிக்கொண்டு போவதால், சில சமயம்



அவர்களுக்குச் சேரவேண்டிய மாலை மரியாதைகள் ......!

ஸோவியத் அரசாங்கத்தின் மூல காரண புருஷரான புரட்சி வீரர் லெனினுடைய வாழ்க்கை எத்தனையோ ஆச்சரிய சம்பவங்கள் நிறைந்ததாகும். அத்தகைய ஒரு ருசிகரமான சம்பவத்தைக் கீழே வெளியிட்டிருக்கிறோம்:

போலீஸ் தர்பார்!

ஏ. கோனேனேவ்

லெனின் வெளி தேசத்திலிருந்து ஒரு சமயம் ருஷ்யாவுக்குத் திரும்பி வந்து அங்கே மூன்று மாத காலம் தங்கியிருந்தார். பீட்ரோகிராட் நகரத்திலுள்ள ஷிரோகாயா வீதியில் தமது மனைவியுடனும் இரண்டு சகோதரிகளுடனும் வசித்து வந்தார்.

ஒரு நாள் காலை ஜாகப் என்பவர் லெனினைப் பார்ப்பதற்காக வந்திருந்தார். வந்தவர் அமைதியாக இருந்தபோதிலும், அவரைப் பார்த்தவர்கள் அனைவரும் அவர் முகத் தோற்றத்திலிருந்து ஏதோ விசேஷம் இருக்க வேண்டும் என்று அறிந்து கொண்டனர். "லெனின் உடனே எங்காவது போய் ஒளிந்து கொள்ளவேண்டும். ஜார் அரசாங்கப் போலீஸ் அவரைத் தேடிக் கொண்டிருக்கிறது!' என்றார் ஜாகப்.

லெனினைக் கைது செய்ய இன்னும் வாரண்டு பிறப்பிக்க வில்லை என்ற போதிலும் எந்த நிமிஷத்திலும் அதை எதிர்பார்க்கலாம். ஜாகபுக்கு இந்தச் செய்தி முன் கூட்டியே தெரிந்து விட்டது.

இனி ஒரு நிமிஷ நேரத்தையும் வீணாக்க முடியாது.

ஜாகப் தன்னுடைய மழைக் கோட்டை எடுத்து லெனினிடம் கொடுத்துப் போட்டுக் கொள்ளச் சொன்னார். அந்தக் கோட்டில் லெனினை அடையாளம் தெரிந்து கொள்வது கஷ்டம். பிறகு லெனினும் ஜாகபும் வெளியே புறப்பட்டுச் சென்றனர். இருவரும் தெருக்கோடிக்குப் போயிருப்பார்கள். இதற்குள் பெரிய லாரி ஒன்று அந்த வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. அந்த லாரி நிறையப் போலீஸ் அதிகாரிகளும் காவலாட்களும் இருந்தனர். எல்லோரும் கீழே குதித்து லெனின் இருந்த அறையை அணுகிக் கதவைப் படபடவென்று அறைந்தார்கள். லெனினுடைய மனைவி வந்து கதவைத் திறந்தாள்.

"லெனின் எங்கே?" என்று அதிகாரிகள் கர்ஜித்தனர்.

"அவர் இங்கு இல்லையே!" என்றாள் லெனின் மனைவி.

பிறகு அதிகாரிகள் அந்த அறையைச் சோதனை போட்டார்கள். மூலை முடுக்கு, படுக்கையின் கீழே எங்கெல்லாமோ தேடிப் பார்த்து விட்டுப் பிறகு முதல் அறைக்குப் போனார்கள்.

ஒரு மூலையில் உயரமான கூடை ஒன்று இருந்தது. ஒரு அதிகாரி ஆத்திரத்துடன் தனது கத்தியால் அதைக் குத்தினான். பின்னர் சமையல் கட்டின் அறை திறக்கப்பட்டது. அனூஷ்கா என்ற வேலைக்காரப் பெண் ஒருத்தி அங்கே ஒரு முக்காலியின் மீது உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

அவள் அந்த அதிகாரியை வெகு கோபத்துடன் பார்த்து விட்டு "ஏன், அடுப்புக்குள் போய்த் தேடிப் பாருங்களேன்" என்றாள்.

"வாயை மூடு!" என்று அந்த அதிகாரி கோபாவேசத்துடன் கூறிவிட்டு, அடுப்பங்கரையைச் சோதனை போடாமலேயே அறைக்குத் திரும்பிப்போய்விட்டார். அங்கே மேஜையின்மீது லெனினுக்கு வந்திருந்த கடிதங்கள் இருந்தன. அவற்றில் சில கடிதங்களை எடுத்தார். அதில் ஒரு கடிதம் போர்முனையிலிருந்த ஒரு சோல்ஜர் எழுதியிருந்தான்:

"அருமை நண்பரும் தோழருமான லெனினுக்கு. இங்கே யுத்த களத்திலுள்ள போர் வீரர்கள் அனைவரும் தங்களை எப்போதும் பின்பற்றத் தயார்......"

மற்றொரு கடிதம் வெகு தூரத்திலுள்ள ஒரு கிராமத்திலிருந்து வந்திருந்தது:

"லெனின் ஒருவன்தான் ருஷ்யாவைக் காப்பாற்றக் கூடிய தலைவன். ருஷ்ய மக்கள் அவன் சொற்படி கேட்டு நடக்க வேண்டும்."

மற்றக் கடிதங்களும் ஏறக்குறைய இதே முறையில்தான் இருந்தன.

அவற்றில் ரகசியம் ஒன்றும் கிடையாது. மக்கள் அனைவரும் லெனினை விரும்புகின்றனர் என்பது எல்லோருக்கும் தெரிந்த பகிரங்க ரகசியமாகும்.

அதிகாரி மிகுந்த ஏமாற்றத்துடன் கடிதங்களைக் கீழே வீசி எறிந்தார். பிறகு அவர் அந்த வீட்டில் இருந்த லெனின் மனைவி, சகோதரிகள் இருவர், அந்த வேலைக்காரப் பெண் உள்பட எல்லோரையும் கைது செய்யும்படி கட்டளை விட்டார். அவர்கள் நாலு பேரையும் குப்பை நிறைந்த ஒரு

அறைக்குள் போட்டு அடைத்தனர். ஒரு நிமிஷத்துக்குப் பிறகு காவலாளி ஒருவன் உருவிய கத்தியுடன் உள்ளே நுழைந்து "எங்கே லெனின்?" என்று கேட்டான்.

அவர்கள் லெனினைக் குத்திக்கொல்லவே வந்திருக்கிறார்கள் என்பது நன்கு தெரிந்தது. அவர்களால் லெனினைக் கண்டு பிடிக்க முடியாமற் போகவே எரிந்து விழுந்தார்கள்.

லெனின் மனைவியையும் சகோதரிகளையும் அதிகாரிகள் வெகு நேரம் வரை கேள்வி மேல் கேள்வி கேட்டு உபத்திரவம் செய்தார்கள். ஆனாலும் அவர்களிடமிருந்து ஒன்றும் கிரஹிக்க முடியாமற் போகவே அவர்களை விட்டு விட்டார்கள்.

* * *

லெனின் வேறு ஒரு இடத்தில் பத்திரமாக இருந்தார்.

அதிகாரிகள் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் காவலாட்களைக் காலை முதல் இரவு வரை காவல் போட்டு யாரையும் வீட்டுக்குள்ளிருந்து வெளியே விடக் கூடாது என்று உத்தரவு போட்டிருந்தார்கள். ரொம்பவும் தெரிந்தவர்களாக இருந்தால் மட்டுமே வெளியே விடலாம் என்பது உத்தரவு.

இந்த முறையைக் கையாண்டால் லெனினை எங்காவது எப்படியாவது கண்டு பிடித்து விடலாம் என்பது அவர்கள் எண்ணம்.

விளாடிமீர் இலியிச் லெனின் அன்றிரவை ஒரு தொழிலாளியின் அறையில் கழித்தார்.

காலையில் கண் விழித்ததும் ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தார். வெள்ளை உடை அணிந்த காவலாட்கள் வாசல் பக்கம் உஷாராகப் பாரா கொடுத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் ஏன் அங்கே நிற்கிறார்கள் என்பதை லெனின் உடனேயே தெரிந்து கொண்டார்.

சாவதானமாகத் தமது உடைகளை அணிந்து கொண்டு கையில் குடையுடன் வெளியே கிளம்பி மெதுவாக வாயில் காப்பாளர் பக்கமாக நடந்து சென்றார்.

காவலாளிகள் சிறிது நேரம் அவரை உற்றுப் பார்த்தார்கள்.

புது ஆளாயிருந்தால் அவரை வெளியே விட அவர்களுக்கு அனுமதி கிடையாது.

இருந்தாலும் அந்தப் புது மனிதன் அவ்வளவு நிதானமாகக் கொஞ்சமும் கவலையின்றி நடந்து செல்வதைப் பார்த்துவிட்டு "இவனைப்பற்றிப் பயமில்லை!" என்று நினைத்தார்கள். அவனும் எங்கும் அவசரமாகச் செல்வதாகத் தோன்றவில்லை.

எனவே, போலீஸார் தாங்கள் கைது செய்யும் பொருட்டுத் தேடும் மனிதனுக்கும் இவனுக்கும் சம்பந்தம் இல்லை என்று நிச்சயமாய் நம்பினார்கள். தாங்கள் கைது செய்யப் போகும் மனிதன் ஒருநாளும் இந்த மாதிரி நிர்ப்பயமாய்ச் செல்லமாட்டான்.

அவனாயிருந்தால் பரபரப்புடன் நாலா திசையிலும் சுற்றிச் சுற்றிப் பார்ப்பான். அவனுடைய பார்வையே வித்தியாசமாய்த் தெரியும்.

ஆனால் இவனோ நேராகக் காவலாளர் பக்கமாகவே கையை வீசிக்கொண்டு சந்தோஷமாகக் காலை வெய்யிலில் நடந்து சென்றான். ரொம்பவும் உற்சாகத்துடனும் காணப்பட்டான்.

காவலாளிகள் அவன் வெளியே போவதைக் கூர்மையாகக் கவனித்துக் கொண்டே சும்மா இருந்து விட்டனர்.

லெனினும் கொஞ்சங்கூட அவசரப்படாமல் நிதானமாக தெருக் கோடிவரை நடந்து போனான்.

அந்தப் போலீஸ் அதிகாரிகளின் வாரியம் அவனைத் தாண்டித்தான் சென்றது. ஆனாலும் இன்னும் அவர்கள் லெனினைத் தேடிக் கொண்டுதான் இருக்கிறார்கள்!

அன்றையதினம் விளாடிமீர் இலியிச் லெனின் பல இடங்கள் மாறிக்கொண்டே இருந்தார். காலையில் ஓர் இடம். மாலையில் மற்றோர் இடம். இரவில் இன்னொரு இடம்.

லெனின் சில தினங்கள் கழித்து இரகசியமாகப் பீட்ரோகிராடை விட்டுச் சென்றார்.



கூந்தலுக்கு ஆபத்து!

எஸ்.வி.எஸ்

'பெண்களின் கூந்தலுக்கு வாசனையுண்டா?' என்று விஷயமாக வாதாடப் போய்ச் சிவபெருமானின் கோபத்துக்கு ஆளானார் நக்கீரர்.

ஆனால் இனிமேல் அந்தக் கேள்விக்கே இடமில்லை!

நாட்டில் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய்க்குப் பஞ்சம் வந்து விட்டது!

* * *

ஒரு வருஷத்துக்கு முன்பு என் நண்பன் ஒருவன் புது விதமாகத் தோற்றமளித்தான். எனக்கு அடையாளமே புரியவில்லை. அவனைக் குரலிலிருந்து கண்டு பிடித்து விட்டேன். ஆனாலும் "எப்படா தாடி வளர்த்தாய்?" என்று கேட்டேன்.

"இப்போதெல்லாம் 'பிளேட்' கிடைப்பதில்லை அல்லவா? அந்தப் பஞ்சத்தைத் தீர்க்க க்ஷவரமே பண்ணிக் கொள்வதில்லை என்று தாடி வளர்க்க ஆரம்பித்து விட்டேன்!" என்றான். எப்படி அவன் யோசனை?

அதைப்போலவே இந்த எண்ணெய்ப் பஞ்சத்தைத் தீர்க்க ஒரு நல்ல யுக்தி ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் ஒருவர் சொல்லியிருக்கிறார்:

"உணவுக்கு மிகவும் தேவையான நல்லெண்ணெயையும் தேங்கா யெண்ணெயையும் பெண்கள் தங்கள் கூந்தலுக்குக் காலையும் மாலையும் தேய்த்துக்கொண்டு வீணாக்குகிறார்கள். அதனால் எண்ணெய்ப் பஞ்சம் அதிகப் படுகிறது. ஆகவே பெண்கள் தங்கள் அருமைக் கூந்தலை ஆறு அங்குல நீளம் மட்டும் வைத்துக் கொண்டு மிச்சத்தைப் பொது ஜன நன்மைக்காகத் தியாகம் செய்து விட வேண்டும்!" என்கிறார்.

ஸ்திரீகள் கூந்தலை ஆறு அங்குலத்துக்கு மேல் வைத்துக் கொள்ளாமல் வெட்டிவிட வேண்டும் என்பதைச் சட்டமாகச் செய்து விட வேண்டும் என்றுகூட அவர் யோசனை கூறுகிறார்!

பஞ்சநிவாரணத்துக்கு இத்தகைய அபாரமான யோசனையைச் சொன்ன புருஷ சிரேஷ்டருக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருந்தாலும் அடாடா, இந்த எண்ணெய்ப் பஞ்சம் நக்கீரர் காலத்தில் வந்திருக்கக் கூடாதா; இந்த மகானுபாவர் இப்போது கூறிய யோசனையை அப்போது யாராவது வெளியிட்டிருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது! அப்போது நக்கீரர் பிழைத்திருப்பாரல்லவா!

ஸ்திரீகளின் கூந்தலை வெட்டிவிடும் யோசனை பஞ்சத்தைத் தடுக்க உதவலாம். ஆனால், அழகான பெயர்களில் கனகாம்பரம், மோகனாம்பரம், டிசம்பர் பூ, ஜனவரி பூ என்றெல்லாம் வந்த அருமையப் பூக்கள் மறுபடியும் தங்கள் பூர்வா சிரமத்துக்கே திரும்பும் துர்க்கதியை நினைக்கத்தான் வருத்தமாக இருக்கிறது.

சிம்மாசனம் இருந்தால்தானே ராஜா! ஹிரோ ஹிடோவைப் பாருங்கள்! தெய்வப் பிறவியாக விளங்கியவன் சாமான்ய மனிதனாகி விட்டான்! ஆகவே, "கனகாம்பரமே, டிசம்பர் பூவே, ஓ காட்டுப்பூவே, உங்கள் சிம்மாசனமே போய் விட்டபோது நீங்கள் ஏன் வருத்தப்பட வேண்டும்?" என்று தான் தேற்றவேண்டும்.

மேலும், மென்மை யுடையவர்கள் பெண்கள் என்று சொல்வது வழக்கம். அதனாலேயே அவர்களுக்கு மெல்லியலார் என்றுகூடப் பெயர். அப்படிப்பட்டவர்களை நல்ல நாளில் கண்டாலே ஆண்களுக்கு எவ்வளவோ பயம்! ஆனால் இப்போது ஆறு அங்குல நீளக் கூந்தலையுடைய பெண்களைப் பார்த்தால் 'ஐயோ, இவள் சூர்ப்பனகையின் தங்கையோ, தாடகையின் தமக்கையோ!' என்று ஆண்கள் அலற வேண்டியதாகலாம்!

கலியாண சீசன் நெருங்கி வந்துகொண்டிருக்கிறது. பெண் பார்க்கச் செல்லும் மாப்பிள்ளைகளே! உஷார்! உஷார்! உஷார்! என்று ஒரு முறைக்கு மூன்று முறை எச்சரிக்கிறேன். மூர்ச்சை போட்டு விழுந்து விடாதீர்கள்.

'கலியாணத்துக்குப் பெண் அல்லவா பார்க்க வந்தோம்? இது பிசாசா யிருக்கிறதே?' என்று பயந்து மிரளாதீர்கள். பேயுமல்ல, பிசாசுமல்ல! எண்ணெய்ப் பஞ்சத்தை முன்னிட்டுக் கூந்தலை ஆறங்குலமாக வெட்டிக் கொண்ட பெண்மணியைத்தான் நீங்கள் பார்க்கிறீர்கள்!



இந்த
போர்மன்
கூறுகிறுர்

"எனக்கு எப்பொழுது சாப்பிட ஒழிவு ஏற்படுகிறதோ அப்பொழுது தான் சாப்பிடுகிறேன். என்னுடைய வேலை அப்படிப்பட்டது. இதனல் அடிக்கடி மார்புவலி உண்டாகிறது—வாயுப் பொருமலின் இச்சின்னத்தை 'பிஸ்மாக்' 'BISMAG' சாப்பிட்டுத் தடுத்து விடுகிறேன்."

இதில் அஜீர்ணக் கோளாறுகளை நிவர்த்தி செய்யவல்ல, நம்பிக்கை வாய்ந்த சரக்குகள் அடங்கி யிருக்கின்றன. இவை வயிற்றிலுள்ள அதிகப்படி புளிப்பு அனைத்தையும் சமப்படுத்தி அஜீர்ணத்தின் சின்னங்களை ஒழித்து விடுகிறது. உங்கள் அருகாமையிலுள்ள வியாபாரி யிடமிருந்து இன்றே 'பிஸ்மாக்' ('பைகரேடெட்' மக்னீஷியா) பௌடர் அல்லது பில்லைகள் வாங்குங்கள்.

'பைகரேடெட்' மக்னீஷியா

"Bismated" Magnesia

BISMAG

REGD TRADE MARK

பிஸ்மாக் லிமிடெட்

ப்ராம்டன் ரோட், லண்டன். N. 16

1762



நீங்கள் இன்று மக்லீன்ஸால் பல் துலக்கி னீர்களா?




துலக்கினேன்.
நியாய யுக்தமான
வழி அதுதான்.



எல்லா கெமிஸ்டுகளிடமும், ஸ்டோர்களிலும் கிடைக்கும்

Copyright



குளிர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது!



நான் களைப்படையாமல் இருக்கிறேன்!

வினோலியா அதிக சுகத்தைக் கொடுக்கக் கூடிய சோப். அதை உபயோகிப்பதனால் ஒவ்வொரு ஸ்நானமும் குளிர்ச்சியையும், உத்ஸாகத்தையும் உண்டு பண்ணுகிறது. இந்த சோப்பின் வாசனை களைப்படைந்த நரம்புகளுக்கு சோர்வை போக்கி சுகத்தைக் கொடுக்கிறது.



உத்ஸாகத்தைக் கொடுக்கிறது!



வினோலியா
ஒயிட் ரோஸ் ஸோப்பு

VWR. 16-50 TM

VINOLIA CO. LIMITED, LONDON, ENGLAND

குறித்த நேரத்தில் லாரிகள்

ON TIME SERVICE

TVS

பொறுமை யிழப்பதும்
நன்மைக்கே!

மதுரை	—	திருச்சி
திருச்சி	—	சென்னை
திருச்சி	—	கோயமுத்தூர்
திருச்சி	—	சேலம்

சேலம்	—	பெங்களூர்
கோயமுத்தூர்	—	பாலக்காடு
கோயமுத்தூர்	—	கள்ளிக்கோட்டை
மதுரை	—	கம்பம்

போக்கு வரத்தில் தாமதம், இட நெருக்கடி
முதலியவைகளால் உங்களுக்கு இப்பொழுது
தடங்கல் ஏற்பட்டிருக்கவேண்டும்

ஒன்றையும் லக்ஷியம் செய்யாதீர்கள்

எடுத்துப்போவதை எங்களிடம்
ஒப்படையுங்கள்

T. V. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ், லிமிடெட்,

மதுரை & சென்னை

போக்கு வரத்து சாதன [illegible] எங்கள் தொழில்

TVSA-25TM

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



ALKI ஏப்ரல் 14, 1946 4 அணா

பட ரஸிகர்களுக்கும், எக்ஸிபிடர்களுக்கும்

எமது புது வருட வாழ்த்துக்கள் உரித்தாகுக!

★

இவ் வருடத்திய மகோன்னத படமாக விளங்கப்போகும்

பி. யு. சின்னப்பா & பி. பானுமதி

நடிக்கும்

"ரத்ன குமார்"

சென்னை நியூடோன் ஸ்டுடியோவில்

விரைவினில் தயாராகி வருகிறது.

★

இப்பொழுது எல்லா இடங்களிலும் கீழ்க்கண்ட எமது படங்கள் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கின்றன.

★

- அசோக்குமார்
- ரம்பையின் காதல்
- பக்த துளசிதாஸ்
- தாராசசாங்கம்
- நவீன சாரங்கதரா
- பிரபாவதி
- உஷா
- கஞ்சர்வாலி (ஹிந்தி)


★

விவரங்களுக்கு :

முருகன் டாக்கி பிலிம் கம்பெனி

மதுரை பெஜவாடா பெங்களூர்

அனைவருக்கும் எமது புது வருட வாழ்த்துக்கள்!



○

சுதேச கைத்தொழிலை ஆதரிப்பது ஒவ்வொரு இந்தியரின் கடமை.

○

நவீனம், நாணயம், உழைப்பு, வேலைப்பாடு, கெட்டிச் சாயம் ஆகிய அம்சங்களில் சிறந்த

— எமது —

போட்டோ மார்க் சேலைகள்

கோர்வை & டிக்கட் கரை பார்டர்களில் கண் கவரும் பல கலர்களில் தயாராகி நாடெங்கும் செலவாகின்றன.

○

மங்கையரை மகிழ்விப்பது
எமது போட்டோ மார்க்கு கைத்தறி சேலைகளே!

—— : தயாரிப்பவர்கள் : ——

ஸ்ரீ சாரதா & கோ.,

நடேசர் சன்னிதி :: பழனி

ஏஜண்டுகள் :—

1. ஸ்ரீ பாலமுருகன் அண் கோ, பாக்ஸ் 5, ஜடையார்கோவில் தெரு, மதுரை
2. ஸ்ரீ முருகன் அண் கோ, தெற்குமாசி வீதி, மதுரை
3. ஸ்ரீ R. M. H. மூர்த்தி கம்பெனி, லக்ஷ்மிபுரம் குறுக்குத் தெரு, மதுரை
4. ஸ்ரீ M. S. T. சுப்பய்யர் & சன்ஸ், நாகல் நகர், திண்டுக்கல்
5. ஸ்ரீ சாரதா அண் கோ, கோடவுன், கீழரதவீதி, திண்டுக்கல்

Regd. No. M. 4392